# சத்திய வேத பாதுகாவலன்

Telegram : "CATHOLIC PRESS", JAFFNA. | 1876-ம் வருஷம் ஆரம்பிக்கப்பட்டது. | Telephone : No. 300

REGISTERED AT THE CEYLON G. P. O. AS A NEWSPAPER.

"கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண்விழிப்பது வியர்த்தம்"

86-ம் புத்தகம் | யாழ்ப்பாணம் 1961-ம் ஆண்டு மாசிமாதம் 9-ந் திகதி வியாழக்கிழமை — பிரதிசதம் 12 | 6-ம் இலக்கம்


# இலங்கை கொம்யூனிஸ்தபாதையில் குறுநடை போடுகின்றது!

ஐரோப்பிய சுதந்திரநாடுகளைக் கொம்யூனிஸ்த நாடுகள் ஆக்குவதற்குப் பொதுவுடமையாளரால் கையாளப்பட்டுவரும் வழிவகைகள் எட்டுபடிகளில் அமைந்துள்ளன. எத்தனையோ சுதந்திர நாடுகளையெல்லாம் ருஷிய அரசாங்க ஆதீனத்தின்கீழ், அடிமைப்படுத்தியிருக்கும் அதே பிரதிரூப வழியினை நமது ஈழநாடும் பின்பற்றியொழுகல் மிகவும் வருந்தத்தக்கதும், சோகந் தருவதுமாகும்.

இதற்குரிய சான்றுகள் நிச்சயமானவை:

**படி 1. பகிரங்க அபிப்பிராய கட்டுப்பாடு.**

பத்திரிகைகளின் கட்டுப்பாடு சம்பந்தமான செயல், பொதுவுடமையாளரின் ஆரம்பசூழ்ச்சி மாத்திரமே.

**படி 2. வாலிபரை வசப் படுத்தல்.**

பாடசாலைகளை எடுக்கும் மசோதா சனப்பிரதிநிதிகள் சபையிலும், செனற்சபையிலும் அங்கீகரிக்கப்பட்டு இப்போது சட்டமாகிவிட்டது.

**படி 3. தேசியமயமாக்கும் வீரச்செயல்.**

உதவிநன்கொடைபெறும் பாடசாலைகளைத் "தேசியக் கல்வி" எனும் பெயரினுற் சருவுகின்றனர். மார்க்சியவாதிகள் மாத்திரமே இச்சருவுதலின் இரகசிய உட்கிடக்கையின் விளைவினை அறிவர். இதே வினைத்திட்பச் செயலின் மற்றோர் பாகம் யாதெனில், பகிரங்கசேவை, தரைப்படை, கடற்படை, ஆகாயப்படை, "பொலிஸ்" பகுதி முதலாம் பல்வேறு துறைகளில் உத்தியோகம் வகிக்கும் கத்தோலிக்க சமூகத்தினரை ஒதுக்கித்தள்ளும் வகையிற் சருவுதலாகும்.

இப்போது பாடசாலைக் கட்டிடங்களையும், காணிகளையும் எவ்வித நட்டஈடுமின்றிச் சுவீகரித்துக்கொள்ள அரசாங்கம் சட்டம் இயற்றி அதைச் சனப்பிரதிநிதிகள் சபையிலும் நிறைவேற்றிவிட்டது. அன்றியும், புதிய பாடசாலைகளை நிறுவிநடத்துவதற்கும் தடைவிதிக்கப்பட்டுள்ளது. இத்தடை சனநாயகமுறைக்கு முற்றும் மாறுனது என்று சமசமாஜிக் கட்சித் தலைவர்களே கூறும்போது அரசாங்கம் தீவிரவாதத்தைக் கடைப்பிடித்து நடக்கின்றது என்பதில் ஐயமும் உண்டா?

**படி 4. அமைச்சர்களுக்குச் சர்வாதிகாரம்.**

இரண்டாவது கல்வி மசோதா கல்வி அமைச்சருக்குச் சர்வாதிகாரம் அளிக்கின்றது. அவருடைய கட்டளைகளை நீதிமன்றங்கள்கூட விசாரணை செய்யமுடியாத நிலைக்கு வந்துவிட்டோம். இப்படி ஒவ்வொரு அமைச்சருக்கும் சர்வாதிகாரம் அளிக்கப்பட்டால் கொம்யூனிசச் சர்வாதிகார ஆட்சிமுறையை நாடி நாடு விரைந்து சென்று கொண்டிருக்கின்றது என்று சொல்லவும் வேண்டுமா?

**படி 5. வியாபார நடைமுறையை மாற்றி அமைத்தல்.**

திரு. இலங்கரட்ன அவர்கள்—ருஷிய பெற்றோலியப் பெருக்கால் நாட்டினை மூழ்கடிக்க முனைந்துள்ளார்.

மலிவு பெற்றோலியத்தை நாம் எல்லோரும் வரவேற்கின்றோம். ஆயின், இவ்வித செயல் ருஷிய வட்டாரத்திலிருந்து மாத்திரமே பெற்றோலியத்தினை இலங்கைக்கு இறக்குமதி செய்யும் பூரண உரிமையினை மறைமுகமாகத் திணித்தற்கு இடப்பட்ட சூழ்ச்சித் திட்டமாகும்.

அன்றியும், இரும்புத்திரை நாடுகளுடன் செய்யப்படும் பெருந்தொகையான வியாபார, இரகசிய உடன்படிக்கைகளும் அதிகையில் அதிகரித்துக்கொண்டே போகின்றன.

மற்றோர்வகையில், தனிப்பட்ட வியாபாரிகளை ஒழித்துக்கட்டியும், வியாபார சமுதாயங்களை அழித்தொழித்தும்—வியாபார உரிமை முழுவதினையும் C. W. E. எனப்படும் அரசாங்க மொத்த வியாபார கூட்டுறவுச் சங்கமூலம் நடாத்த தீவிர நடபடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. இத்தகைய பொதுவுடமைக்கொள்கைபாற்பட்ட வியாபார ஏற்பாடுகள்மிக இலகுவும், தந்திரமுமான நடபடிக்கைகளேயாகும்.

பொதுவுடமை முறையில் இதனை நடாத்திமுடிக்க எண்ணியே C. W. E. எனப்படும் இவ் வியாபார சங்கத்திற்கு—பொதுவுடமையாளர் ஒருவர் உத்தியோகஸ்தராக நியமனம் பெற்றுள்ளார்.

**படி 6. பிறநாட்டு உதவி முறை—மாற்றி அமைக்கப்படுதல்.**

தொழிற்சாலைகள் முதலியவற்றினை நிறுவுதற்கு ருஷியநாட்டு உதவிகள் கோரப்பட்டு வருவதாகக் கதைகள் அடிபடுகின்றன. இவ்வித உதவிகட்குக் கைம்மாருக—உலக ஐக்கிய சபையில் இலங்கை சோவியெற் அரசாங்க வழிநடத்தல்களுடன் இணைந்து செல்லவேண்டுமென்பது இரகசிய திட்டம்.

**படி 7. பகிரங்க சேவையாளரைக் கீழறுத்தல்.**

பொலிஸ்பகுதி, தரைப்படை, கடற்படை, ஆகாயப்படை என்பனவற்றில் — மார்க்சியவாதிகள்

[தொடர்ச்சி 8-ம் பக்கம்]

## வத்திக்கான் பொதுச் சங்கத்துக்கென 5,000 பவுண் நன்கொடை

எதிரே நடக்கவிருக்கும் வத்திக்கான் திருச்சங்கச் செலவுகளுக்கென அகிலத்திலுள்ள மரியன்னையின் சங்கங்களின்பேரால் 5,000 பவுண் பாப்பரசருக்கு நன்கொடை யளிக்கப்பட்டுள்ளது.

## பரி. 12-ம் பத்திநாதருக்கு முத்திப்பேறுபெற்ற பட்டம் அளிக்கும்படி விண்ணப்பம்

பரமபதமடைந்த பரி. 12-ம் பத்திநாத. பாப்புவுக்கு முத். பட்டம் சூட்டும்படிகேட்டு ஸ்பானிய கத்தோலிக்க சேவையாளர் பல்லாயிரக்கணக்கான கையெழுத்துக்கள் சேர்த்துப் பரிசுத்தஸ்தானத்துக்கு அனுப்பியுள்ளனர்.

## இரு மேற்றிராணிமாருக்கு ஓ. பி. இ. கௌரவ பட்டம்

● **நைஜீரியாவில்...**

அண்மையில் சுய ஆட்சிபெற்ற நைஜீரியாவில் கலபாரின் துணை மேற்றிராணியார் எக்கண்டெம் பிரித்தானிய அரசின் ஓ. பி. இ. கௌரவபட்டம் அளிக்கப்பெற்றிருக்கிறார். இவர் நைஜீரியாவின் முதற் சுதேச மேற்றிராணியாராவர். இபியோனே கிராமத் தலைவனின் மகனான எக்கண்டெம் மேற்றிராணியார் ஒரு ப[illegible]ஷன் பாடசாலையில் கல்வி கற்றபின் குருமடத்தில்சேர்ந்தார். இவரது குருப்பட்டத்தின்முன் இவரது தகப்பனர் திருச்சபையில் சேரலாயினர். இவரது அபி[illegible] வைபவத்திற்கு இவருடைய வயோதிக தந்தை குடும்பசமேதரராய் நெடுந்தூரம் பிரயாணஞ் செய்து ஆசனக்கோவிலுக்கு வந்திருந்தார்.

● **மோல்தாவில்**

சம்பாவிலு அப்போஸ்தலர் ஏறிச்சென்றகப்பல்புயலில்சிக்கிச் சேதமானபொழுது மோல்தா தீவின் கரையை அவர் அடைந்த 19-ம் நூற்ருண்டு விழாக்களைத் திட்டம்வகுத்துத் திறம்படநடாத்தியமைக்காக, கோலெயிரோ மேற்றிராணியார் ஓ. பி. இ. பட்டம் சன்மானிக்கப்பெற்றிருக்கிறுர். வேதாகம பண்டிதரான இம் மேற்றிராணியார் மோல்தா மொழியிலும், அராபிய மொழியிலும் பாண்டித்தியம் பெற்று விளங்குகின்ருர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கத்தோலிக்க சூழல்கொண்ட கல்வி என்றால் என்ன?

**எமது ஆன்மீக திரவியங்களை விளங்குவோர்க்கு அதிகவிளக்கம் கொடுப்பது அவசியமில்லை; விளங்கிக் கொள்ளாதோர்க்குத் திருப்தியுள்ள விளக்கம் கொடுப்பது கஷ்டம். ஏனெனில், நாம் சீவிப்பது சுபாவத்திற்கு மேலான ஓர் சீவியம். அதை அவர்கள் காணவுமில்லை, அனுபவிக்கவுமில்லை, அதன் ஆழத்தை அளந்துபார்க்கவுமில்லை. நாம் அதிற் கொண்டிருக்கும் உயிருள்ள பற்றுதலோ, நாம் சுவாசிக்கும் காற்றுக்கும், குடிக்கும் தண்ணீருக்கும், எம்நாடிகளில் ஓடுகின்ற இரத்தத்திற்கும் ஒப்பானது. இதை அன்னோர் விளங்கிக் கொள்ளும் போழ்து எமது நன்றி அவர்கட்கு உரித்தாகுக.**

தேசிய கல்வித்திட்டத்திற்கு வேண்டியதாகிய சூழல் என்னத்தில் அடங்கியுள்ளது? ஆர்வங்கொண்ட நல்ஆசிரியர்களிலும், குறித்த நோக்கத்தைக் கொண்டுள்ள பாடத்திட்டத்திலும், நம் முன்னோர் நமக்களித்த அருஞ்செல்வங்களை ஈந்துநிற்கும் பாடபுஸ்தகங்களிலும், விசேஷமாய், ஓரே இலக்கை அடைவதற்காய் இதிற் சம்பந்தப்பட்டோர் யாவரும் ஓய்வு அயர்வின்றி ஒத்துழைப்பதிலுமே யாம்.

## எமது இலட்சியம் :

தேசிய கல்வித்திட்டத்தை மிகு வேகமாய் ஆதரித்து நிற்போருள் அநேகர், கத்தோலிக்க கல்விச் சூழலின் அர்த்தத்தை விளங்கிக்கொள்ளுகிறார்களில்லை. இதற்கு, அவர்கள் வேறு சில காரியங்களை விளங்கிக்கொள்வது அவசியம்: கத்தோலிக்ககிறீஸ்துவன் ஒருவன் தனது சுபாவத்துக்குரிய மனுஷ சீவியத்தை மாத்திரம் சீவிக்கிறவனல்ல. அதேநேரத்தில் அவன் சுபாவத்துக்கு மேலான வேறோர் சீவியத்தையும் சீவிக்கிறவனாகிறான். இத்தால் தேவனே அவனுள்ளத்தில் சீவிக்கிறார். கிறீஸ்துவன் பெற்றுக்கொள்ளும் ஞானஸ்நானத்தின் மூலமாய் இம்மேலான சீவியம்தொடங்கி, அவர் ஏற்படுத்தித் தந்த மற்றும் அருட்கருவிகளினால் வளர்க்கப் பெற்று, பரலோகத்திலேயே முடிவெய்துகின்றது. இவ்வுண்மையை ஏற்றுக்கொள்வோமானால், கத்தோலிக்க கல்விச் சூழலையும் ஓர்விதத்தில் விளங்கிக் கொள்ளலாம. யாராவது இவ்வுன்னத ஆத்தும சீவியத்தின் உண்மையை ஏற்றுக்கொள்ளாவிட்டால் அப்பேர்ப்பட்டவாக்குக் "கத்தோலிக்க கல்விச் சூழ்நிலை"யையும் விளங்கிக்கொள்வது முடியாக் காரியமாகும்.

கத்தோலிக்க கல்வியானது பிள்ளையொன்றை இவ்வுலக சீவியத்தின் போது பூலோக சமுதாயத்திற்கு உகந்தவனாயும், சீவியமுடிவில் மறு உலகத்திற்கு ஏற்றவனாயுமிருக்கும்படி ஆயத்தப் படுத்துகின்றது. இவ்வுலகிற் செய்யும் கிருத்தியங்களினாலேயே அவன் நித்திய கதியை அடைய வேண்டும். இவ்விரு நோக்கங்களும் ஒன்றுக்கொன்று முரணானவையல்ல. கத்தோலிக்க பாடசாலை இவ்விரு நோக்கங்களையும் வைத்தே, பிள்ளையின் தத்துவங்களைப் பயிற்றல்வேண்டும்.

ஒருபிள்ளை புத்தியால் அறியவேண்டிய உண்மைகள் யாவும், அரைகுறையாயல்ல, முழுமையாகப் பாடசாலையில் அறிவுறுத்தப்படல்வேண்டும். உண்மையை அறிவது மாத்திரம் போதாது. அதைப் பேசவும் அதின்படி நடக்கவும் பழக்கப்படல்வேண்டும்.

ஆகையாற்றான், எவ்வளவாகவோ பிள்ளையின் சித்தமும், இருதயமும் நேர்மையின் பாதையைப் பின்செல்லும்படி பழக்கப்படல்வேண்டும்.

கல்வியின் மிகவில்லங்கமான காரியங்களுள் ஒன்று இதுவே. நாட்டிற்கும் இது எவ்வளவோ நன்மைபயக்கக் கூடியது இதிலே தான் கத்தோலிக்க ஆசிரியரின் முன்மாதிரிகை கருத்துள்ளதாகின்றது. ஒருபிள்ளை குழந்தைப்பருவத்தினின்று பாலியப் பருவத்திற்கும், அதினின்று வாலிபப் பருவத்திற்கும் வரும்போதுதான் ஆசிரியனின் முன்மாதிரிகைச்சேவை அவசியமாகின்றது.

நன்மையை அறிந்து தெரிந்து எடுக்கப்படவேண்டிய இப்பருவத்திலே, எந்தவிதமான அரசாங்கச் சட்டமும் பிள்ளையின் மனதையாவது இருதயத்தையாவது பயிற்றி, அவனை உருவாக்கப் போவதில்லை. கத்தோலிக்க கொள்கையின்படி, பிள்ளையின் ஆத்மீக தத்துவங்கள் பயிற்றப்படுவதுடன் அவன் சரீரதத்துவங்களும் முறையே வளர்க்கப்பட்டு வரவேண்டும்.

## வழிகள் :

கத்தோலிக்க கல்விச் சூழ்நிலையை உருவாக்க வேண்டிய பொறுப்பாளர் இருசாராரெனச் சொல்லலாம். முதன் முதலாய், தேசிய கல்வித்திட்டத்தை அல்லது நாட்டின் பிரஜைகளுக்குரிய கல்வியை உருவாக்க வேண்டியவர்கள் போன்றவர்கள் ஒரு சாராராவர். மற்றச் சாராரோ பிள்ளையினது சுபாவத்திற்கு மேலான சீவியத்தோடு சம்பந்தப்பட்டவர்களாவர்.

மாணவனின் ஆன்மசீவியம் புத்தியிலும், பத்தியிலும் பழுதறவளர வேண்டுமாயின், ஆசிரியரும் பள்ளிக்கூடப் பாடத்திட்டமும், புஸ்தகங்களும், பாடசாலை நடப்பிக்கும்முறையும், யாவும் கத்தோலிக்க கோட்பாடுகளுக்கு ஏற்றனவாய் இருத்தல் வேண்டும். ஊட்டப்படும் போதகங்கள் கத்தோலிக்க திருச்சபையின் போதகங்களுக்கு முரண்பாடுள்ளவைகளாயிருத்தலாகாது. கல்வித்துறையிலோ எத்தனையோ பாடங்கள் இவ்வுலகத்திற்கும், மறுவுலகத்திற்கும் உரிய விஷயங்களைக் கொண்டுள்ளவை.

**சித்தத்தையும், இருதயத்தையும்** [illegible]ற்றியெடுப்பதில், புண்ணியம மகிமை[illegible]குரியதென்றும், பாவம் வெறுக்கப்பட வேண்டியதென்றும் உணர்த்தல் வேண்டும். எமது சமய போதகமானது மேற்சொல்லப்பட்டவைப[illegible]றி திட்டமான முறையில் [illegible]கின்றது. இவற்றைப்பற்றி அரசா[illegible]க கல்விக் கோட்பாடுகளோ மிகவும் குறைபா[illegible]யிருக்கும்; ஏனெனில், அவை பல சமயத்தினருக்கும் ஏற்றவையாயிருக்க வேண்டும்.

மாணவர்களுக்குக் கொடுக்கப்படும் புஸ்தகங்களின் வகையும், ஓய்வுநேரத்தைச் செலவிடும்முறையும், நடைத்தைக்குரிய கோட்பாடுகளும், விளையாட்டு நேரத்திலும் ஓய்வுநேரத்திலும் தங்களுக்குள்ளே பழங்கிக்கொள்ள வேண்டிய மாதிரியும் இவையாவும் கத்தோலிக்க சூழ்நிலையை ஆக்குவதற்குக் கவனிக்கப்படவேண்டிய காரியங்கள். ஆனால், அரசாங்கபாடசாலைகள், மிகச்சிறிய நேரத்திற்கே சமய பாடத்தைக் கற்பிப்பதுடன் நின்றுவிடுவதால், மேற்கூறியனபற்றி சொற்பகவனம்தானும் எடுக்குமோ என்று ஐமிச்சப்படுவதற்கு இடமுண்டு.

இவற்றிலும் பார்க்க, கத். கல்விச் சூழலையுண்டாக்க மிகவும் வல்லமை பொருந்தியவழி யாதெனில், தேவ அருட்கருவிகள்மூலம் தேவனுக்கும் பிள்ளைக்குமிடையில் இன்றியமையாத ஓர் தொடர்பையுண்டு பண்ணிவிடுவதே. இதனாலேயே ஒவ்வோர் கத். பாடசாலையும் தேவாலயச் சூழ்நிலையிலே அமைக்கப் பெற்றிருக்கிறது. இங்கே மெய்யானதேவன் வசிக்கிறார்.

கத்தோலிக்கராகிய எம்முடைய ஆன்ம சீவியமானது தனிப்பட்ட மனுஷமுயற்சியினால் அல்ல, விசேஷ விதமாய், செபம் தியானம் தியாக பரித்தியாகங்களினால் பெறப்படும் தேவ அருளினாலேயே வளர்ந்து கொண்டு வருகின்றது. பிள்ளையானது தன்னை உண்டுபண்ணியவரிடம் செல்லவும், தேவன் தாமுண்டுபண்ணிய பிள்ளையின் ஆத்துமத்தில் வசிக்கவும் கத்தோலிக்க பாடசாலைகள் தகுந்த சூழலை உருவாக்கி விடுகின்றன.

எமது பாடசாலைகளில் கொடுக்கப்படும் பயிற்சியெல்லாம் இந்த முக்கிய நோக்கத்தையே கொண்டனவாயிருக்கின்றது. செபங்கள், ஞானபோதனைகள், பத்திமுயற்சிகளாகிய திவ்விய பூசை, பாவசங்கீர்த்தனம் வெளி அனுட்டானங்களாகிய திருநாட் கொண்டாட்டங்கள், சங்கீத விழாக்கள், பத்திக்கூட்டங்கள்—இவையாவும் பிள்ளையின் மனதில் என்றுமே பதித்தற்துரிய கத்தோலிக்க சூழ்நிலையை உண்டுபண்ணி, உறுதிகொண்ட ஓர் ஆன்ம சீவியத்தை, பத்தியற்ற நம் நாட்களில், அவன் சீவித்து மலரப் பண்ணுகின்றது.

பலகுறைகள் வாய்ந்த உலகினில், எமது கத்தோலிக்க சூழ்நிலையைப் பூரணமாய்க் கண்டடைவது முடியாதென்றாலும், எம்மால் இயலுமான மட்டும் அதை எம் பிள்ளைகளுக்கு நாம் ஆக்கிக்கொடுப்பது முறையே. தாபரவளர்ச்சிக்கு அதன் இடமும், காலநிலை, சூழல்முதலியனவும்பிரதானமாயிருப்பதுபோல, தேசியகல்வி வளர்ச்சிக்கு நாட்டினது புராதன சீர்திருத்தமும், பண்பும் கவனிக்கப்படவேண்டியவையென்பதுபோல, எமது பிள்ளைகளின் வளர்ச்சிக்கு, கத்தோலிக்க சூழ்நிலையும் அவசியமானது.

இதேசூழலில் அவர்கள் எப்போதுமே சீவித்துப் பழகிவந்ததினால், அதையிழந்து போகும் வேளையிலே தான் அதன் அருமையும் அத்தியாவசியமும் தெரியவருகின்றது. சுவாசக்கஷ்டம் ஏற்படும்போதுதான் அது மட்டும் நாம் நன்கு சுவாசித்தோம் என்பதை உணருகிறோமல்லவா? உயிர்தரும் கத்தோலிக்க சூழ்நிலை எமக்கு மறுக்கப்படும்போதுதான் நாமதை உயிரிலும் பார்க்க மேலான விதமாய் மதிக்கவேண்டியிருக்கின்றது. ஏனெனில், அஃதின்றி எமது ஆன்ம சீவியம் இலகுவில் வரண்டுகுறுகி, சிலவேளை பழுதாகி அழிந்தொழிந்து போனாலும் போய்விடும்.


### அறிவித்தல்.

யாழ்ப்பாணம் ஸ்ரேசன் முன்பாகவுள்ள ஸ்ரான்லி ரோட்டு 145-ம் இலக்கக் காணி நிலப் பரப்பு (4). நான்கும், கிணறு, தென்னை, பலா, மாமரங்கள் முழுவதும் விற்பனைக்கு இருக்கிறது அறியவிரும்பின் வருக.

ஞா. யோண்,
48, இராசாந்தோட்ட ரோட்,
யாழ்ப்பாணம்.

### கோட்டு விற்பனவு விளம்பரம்

**யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டில்**
இல. M. B. 2563

கரம்பன்
D. A இராசையாபிள்ளை
கைம்பெண் எலிசபெத் முத்தம்மா
— வழக்காளி.

எதிராக

ஊர்காவற்றுறை, மேற்கு
1. நாகமுத்து தம்பிப்பிள்ளை
2. ஷையூர் பெண் செல்லமுத்து
— எதிராளிகள்.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M. B. 2563-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் இரண்டு துண்டுக் காணிகள் 1961-ம்ஆல் பங்குனிமீ 11-ம் உ சனிக்கிழமை முற்பகல் ஒன்பது மணிதொடக்கம் அந்தந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத் தொகை: முதல் வட்டி ரூபா4,916-ம் ரூபா 3,000-க்கு22-11-58 தொடக்கம், 25-5-59 வரை 15வீதமான வட்டியும், அதன்மேல் முழுத்தொகைக்கும் இறுக்கும்வரை 5வீதமான வட்டியும், கோட்டுச் செலவு ரூபா 243-22½ சதம். கோட்டுச் செலவில் ரூபா 150 கொடுபட்டது.

#### காணிகளின் விபரம்

1- வடமாகாணம், யாழ்ப்பாண டிஸ்திறிக் தீவுப்பகுதி, ஊர்காவற்றுறைக் கோவிற்பற்று, கரம்பனிலுற "திமில குளப்பிட்டி" பர. நி. இல. ஒன்றேகால் (பர. நி. இல. 1¼). எல்லை: கிழக்கு— காசியர் துரைசாமிக்குரிய வாதனம். வடக்கு—கார்த்திகேசு இளையதம்பிக்குரிய வாதனம். மேற்கு — செல்லவிநாயகம் கைம்பெண் ஆச்சிமுத்துவிற்கும், பங்காளருக்குமுரிய வாதன. தெற்கு— ரோட்டு. இதடங்கலும். இதன் பதிவு C. 182 / 103.

2. ஷையிறை "கோணி குடியிருப்பு ஆண்டான் திடல், திமில குளம்" பர நி. இல. இரண்டு குளி பதினொன்றே கால் (பர. நி. இல. 2 குளி 11¼). கல் வீடும், கிணறும், வான்பயிர் செய்பயிர்களும். எல்லை: கிழக்கு—ஐயம்பிள்ளை வேலுப்பிள்ளைக்குரியவாதனம். வடக்கு — S. ஆரோக்கியம் மகள் மரியை அற்புதத்திற்குரியவாதனம். மேற்கு—வேலுப்பிள்ளை விசுவலிங்கத்திற்கும், மறுபேர்கட்குமுரியவாதனங்கள். தெற்கு— ரோட்டு. இதடங்கலும். இதன் பதிவு C. 99 / 276.

வை. ஏரம்பமூர்த்தி,
கொம்மிஷனர்.

காரைநகர், 1961-ம் ஆல் தைமீ
31-ம் திகதி.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்நாட்டுச் செய்திகள்

## வேதசாஸ்திர கலாநிதிப் பட்டம்

தென்னிந்திய சபையின் யாழ்ப்பாண அத்தியட்சஸ்தானத்தின் அத்தியட்சகரான மகாகனம் டக்றர் சபாபதி குலேந்திரன் அவர்களைச் சிறும்பூர் சர்வகலாசாலை "டி. டி." எனப்படும் வேதசாஸ்திர கலாநிதிப் பட்டம் சன்மானித்து மகிமைப்படுத்தியிருப்பதாக அறியவந்து பெரிதும் சந்தோஷமானோம்.

## பண்டாரநாயக்கா கொலைவழக்கு

ஒரு வாரத்திற்குப் பின்போடப்பட்டிருந்த பண்டாரநாயக்கா கொலை வழக்கு சென்ற 6-ந் திகதி திங்கட்கிழமை பகல் 11 மணிக்கு கொழும்புச் சுப்பிறீங் கோட்டிலே திரு. ரி. எஸ். பெர்னண்டோ நீதியரசரால் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படலாயிற்று. இது சம்பந்தமாய் ஏழு யூரிமார் தெரிவு செய்யப்பட்டதும் எதிரிகள் ஐவர்மீதும் சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் ஆங்கிலத்திலும், சிங்களத்திலும் படித்துக்காட்டப்பட்டன. எதிரிகள் ஐவருமே தாங்கள் குற்றவாளிகள் அல்லவெனத் தெரிவித்தனர். மாபிற்றிகம புத்தாரக்கித தேரோ, திரு. எச். பி. ஜயவர்த்தன, திரு. அனுரா டி சில்வா, தல்துவே சோமராமதேரோ, திரு. டபிள்யு. ஏ. நியூட்டன் பெரேருவாகிய எதிரிகள் ஐவரும் திரு பண்டாரநாயக்காவைக் கொலைசெய்யச் சதியாலோசனை செய்தார்களென்றும், தல்துவே சோமராம தேரோ அவரைக் கொலைசெய்தாரென்றும் குற்றஞ் சாட்டப்பட்டிருக்கிறார்கள்.

## கரும்புச் செய்கைக்கு ஆபத்து

கந்தளாயிலே சீனித்தொழிற்சாலைக்கென்று கரும்புச்செய்கை நடைபெறும்பகுதியில் யானைக் கூட்டங்கள் நுழைந்து கரும்புப்பயிருக்குப் பெருஞ் சேதம் உண்டுபண்ணி வருகின்றன. தினமும் ஒரு ஏக்கர் கரும்புப்பயிர் வீதம் அவற்றால் பரிநாசமாக்கப்பட்டு வருகிறது. அதனால் கரும்புச்செய்கைக்குப் பெரும் ஆபத்தான நிலைமை ஏற்பட்டிருப்பதாக விவசாயப்பகுதி தெரிவிக்கின்றது. இந்த யானைக்கூட்டங்களைத் தடுக்கமுயன்றதில் கந்தளாய்ச் சீனித்தொழிற்சாலைத் தொழிலாளிஒருவர் ஏற்கனவே யானைஒன்றுக்குப் பலியாகியுள்ளார்.

## வெளியேறிவரும் மக்கள்

இந்நாட்களிலே பலரும் இந்நாட்டினின்றும் வெளியேறிப் பிறநாடுகளில் போய்க் குடியேற ஆசிப்போராய்க் காணப்படுகின்றனர். பறங்கியரென அறியப்படும் பேர்க்கசாதியினரில் 1,525பேர் ஏற்கனவே ஆஸ்திறேலியாவில்போய்க் குடியேறியிருக்கின்றனர். இப்போதும்பலர் அங்குபோய்க் குடியேற ஆபத்தப்படுகின்றனர். பிரித்தானியிலும் அதன் குடியேற்றநாடுகளிலும், மற்றுமசில நாடுகளிலும் போய்க் குடியேறவிரும்பிப் பலரும் விசாரணை நடத்திவருவதாகத் தெரியவருகிறது.

## இப்போது பணம் மிச்சமாம்

"எந்தவிதமான ஒருமசோதாவையும் ஆக்கவும், அரங்கேற்றவும்கூடிய நிலைமையிலுள்ள இன்றைய அரசாங்கம் இதுவரை ஐம்பதுபுதியசட்டங்களை ஆக்கியுள்ளது; இன்னும் சொற்பகாலத்தில் அது தோட்டங்களைமாத்திரமல்ல, ஆனால்,பொதுமக்களையுமே தேசியமயமாக்கமுடியும்; உதவிப் பணம்பெறும் பாடசாலைகளை அரசாங்கம் எடுத்துக்கொள்வதை நானெதிர்ப்பவன் அல்ல; ஆனால்,பாடசாலைகளின் திருத்தத்துக்கும், அபிவிருத்திக்குமாகக் கடந்தகாலத்தில் நான் செலவிட்டுவந்தபணம் இப்போது எனக்கு மிச்ச"மென்று சென்றபுதன்கிழமை வட்டகாமத்தில் நடைபெற்ற பிரியாவிடைவிழாஒன்றில் திரு. எச். டபிள்யு. அமரசூரியா கூறலாயினர். முன்னாள் செனற்றரான இவர் புத்தபாடசாலைகள் பலவற்றின் முகாமைக்காரராய் இதுவரை இருந்துவந்தார்.

## மூன்று வட்டாரங்களுக்கு ஒரு அங்கத்தவர்

பையகாலைப் பகுதியைச்சேர்ந்த மீகமம்– இற்றுப்பனை – வெலிப்பனைக் கிராமச்சங்கதேர்தல் சமீபத்தில் நடைபெற்றபோது அதன் 24வட்டாரங்களிலும் மூன்றுவட்டாரங்களுக்கு ஒருவரே தெரிவுசெய்யப்படலாயினர். பன்றிலா, இற்றுப்பனைகிழக்கு, கம்மனை எனும் மூன்றுவட்டாரங்களுக்கும் திரு. வில்மட் ஜயனெற்றிஎன்பவர் தெரிவுசெய்யப் பட்டுள்ளார்.

## அரிசிப்பங்கீட்டுப் புத்தகங்கள்

அரிசிக்கூப்பன்புத்தகங்கள் இல்லாதவர்கள் அவைகளைப் பெறுவதற்கு விண்ணப்பஞ்செய்துகொள்ள வேண்டிய கடைசித்தினம் அடுத்தபங்குனிமாதம் 31-ந்திகதிவரை நீடிக்கச்செய்து விடப்பட்டிருக்கிறது. அரிசிக்கூப்பன் புத்தகங்கள் இல்லாதவர்கள் அவற்றிற்கு விண்ணப்பஞ்செய்ய வேண்டிய காலம் சென்றஜப்பசிமாதத்துடன் முடிவடையலாயிற்று. ஆனால், அதுமுதல் அதிகமானவிண்ணப்பங்களை உணவுப்பகுதி பெற்றுக்கொண்ட காரணமாகப் புதியஅரிசிக் கூப்பன் புத்தகங்களுக்கு இன்னமும் விண்ணப்பஞ்செய்யாதவர்களுக்கு ஒருகடைசிச் சந்தர்ப்பம் அருளப்படவேண்டுமென்று உணவுமந்திரி தீர்மானித்திருக்கின்றார்.

## கிராம விதானைமார் திட்டம்

"கிராம சேவகா அதிகாரிகள்" என்ற தனது புதிய கிராமத் தலைமைக்காரர் திட்டத்தை மந்திரிசபையின் அங்கீகாரத்திற்கென உள்நாட்டுமந்திரி இப்போதைக்குச் சமர்ப்பிக்கமாட்டார். ஏனெனில், அதற்கு 50 லட்சம் ரூபா செலவேற்படுமென உள்நாட்டு மந்திரி காரியாலயம் கண்டறிந்திருக்கிறது. ஆனால், இந்தப்பணம் இப்போது கிடைக்கக்கூடியதாயில்லை.

## ஈரவெங்காய விலைக்கட்டுப்பாடு

உணவுக்கமிஷனர் ஈரவெங்காயத்திற்கு மூன்றுமாசங்களின்முன் விதித்திருந்த விலைக்கட்டுப்பாட்டைச் சென்ற தைமாதம் 30-ந் திகதியிலிருந்து அகற்றிவிட்டுள்ளார். தற்போது சந்தையில் ஈரவெங்காயம் ஏராளமாயிருப்பதும், அதைத் தாராளமாக வாங்கக்கூடியதாயிருப்பதுமே விலைக்கட்டுப்பாடு நீக்கப்படக் காரணமாகும்.

## தமிழ் உரிமைப் பாதுகாப்பு முன்னணி

தமிழ்ப்பேசும்மக்களின் உரிமைகளைப் பாதுகாக்கும் முன்னணிஒன்றை வண. தனிநாயகம் அடிகள், திரு. குமாரசெற் தம்பையா, முன்னாள் சொலிசிற்றர்-ஜெனறல் திரு. எம். திருச்செல்வம ஆகியோர் சேர்ந்து ஆரம்பித்துள்ளனரெனத் தெரியவருகிறது. இந்தமுன்னணி இருவித அலுவல்களைச் செய்யவிருக்கிறது. (1) தமிழருக்குச் [illegible]லுள்ள தன்மைகளைச் சிங்கள மக்களுக்கு எடுத்துரைப்பது. (2) தமிழ் மக்கள் தங்கள் அலுவல்களையெல்லாம தமிழிலேயே செய்யவேண்டுமெனப் பிரசாரஞ் செய்வது. எத்தனை சட்டங்களைத்தானும் அரசாங்கம் இயற்றியபோதிலும் தமிழ்ப்பேசும் மக்கள் தங்கள் அலுவல்களைத் தமிழிலேயே செய்வதென உறுதிபூண்டால் தமிழிற்குத் தானகவே சமஅந்தஸ்துக் கிடைத்துவிடுமென்பது இந்தமுன்னணியினரின் கருத்தாகும்.

## தமிழர்கள் மத்தியிலே அலுவல் பார்ப்பார்கள்

சிங்களத்திலே கடிதப்போக்குவரத்து நடத்தக்கூடிய அரசாங்க ஊழியர்கள் தமிழ்ப்பேசும் பகுதிகளிலுள்ள சகல கச்சேரிகளுக்கும், ஏனைய மாகாண நிர்வாக அலுவலகங்களுக்கும் விரைவிலே நியமிக்கப்படவிருக்கின்றார்கள். முதலில் இந்தப்பகுதிகளிலே சேவைசெய்வதற்கேற்ற தொண்டர்களைத் திரட்ட உள்நாட்டுமந்திரிகாரியாலயம் தீர்மானித்திருக்கிறது. போதிய தொண்டர்கள் சேராவிடில் அரசாங்க ஊழியர்களை அவற்றிற்கு அதிஇடமாற்றஞ் செய்யும் உள்நாட்டு மந்திரி காரியாலயம தொண்டர்களின் சேவைக்கென குறித்திருக்கும் தமிழ்ப்பேசும் பகுதிகள் யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, திருகோணமலை, வவுனியா, புத்தளம் என்பனவாகும்.

---

## கோட்டு விற்பனவு விளம்பரம்

**யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டில் இல. M. B. 2583**

வண்ணார்பண்ணை,
இல. 22, சிவப்பிரகாசம் ரோட்,
வல்லிபுரம் இளையதம்பி
—வழக்காளி.

எதிராக

சாவகச்சேரி வடக்கு
1. கந்தையா கிருஷ்ணபிள்ளையும்
2. பெண் சின்னம்மாவும்

— எதிராளிகள்.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் M. B. 2583ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் இரு துண்டுக்காணிகள் 1961ம் ஆண்டு பங்குனி மீ 9-ந் உ வியாழக்கிழமை முற்பகல் 10-30 மணி தொடக்கம் அந்தந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதல் வட்டி ரூபா 1,278 80ம் இன்னும் ரூபா 1,000-00த்திற்கு 6-12-1958 தொடக்கம் 4-6-1959 வரையும் 100க்கு 10% வட்டியும் பின் கூட்டுத்தொகைக்கு இறபடும் வரையும் 100க்கு 5% வட்டியும் கோட்டுச் செலவு 193 75.

### காணிகள் விபரம்

1 வடபாகாணம் யாழ்ப்பாண டிஸ்திறிக் தென்மராட்சிப்பகுதி சாவகச்சேரி கோயிற்பற்று சாவகச்சேரி இறை கைக்குளவளவு, குளைகாடு வளவு ப. நி. இ. 2½ வீடும் பயிர்வகைகளும். எல்லைகிழக்கு இளையதம்பி வல்லிபுரத்தின் ஆதனம். வடக்கு ரோட்டு. மேற்கும், தெற்கும் இராமு சுந்தையாவின் ஆதனம்.

2. ஷெ சாவகச்சேரி இறை குளைகாடு வளவு ப. நி. இ. 4⅞. எல்லை: கிழக்கு நரசிங்கன் சின்னப்புவின் ஆதனம். வடக்கு முருகர் சபாபதிப்பிள்ளை ஆதனம். மேற்கு அப்பாக்குட்டி சதாசிவத்தின் ஆதனம். தெற்கு கிழக்கெல்லைக் காணிக்கு போக்குவரவு செய்யவைத்த அடிப்பாதை இதடங்கலும் இரு கல்வீடுகளும் பயிர் வகைகளும் கிழக்கெல்லைக் காணியிலிருக்கும் கிணற்றில் அரைவாசி தண்ணீர்ப் பங்கும் வழி வாய்க்கால் பாவிப்புரித்தும்.

செ. இரத்தினசப[illegible]தி,
கொம்மிஷனரும், விலமதிப்பாளரும்
நம் 45, 4-ம் குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம். 3-2-61

---

**இறைவன் எமது உள்ளத்தில் இ[illegible] எமது பகல் இரவாகும்; அவர் இருப்பரேல் எமது இரவு எல்லாம் பகல்.**

## அங்கிளிக்கன் சபைத் தலைவருக்குப் புகழுரை

அங்கிளிக்கன் சபைக்குப் புதிதாய் நியமனம் பெற்றிருக்கும் அத்தியட்சர் றம்சே அவர்கட்கு லிவர்ப்பூல் அதிமேற்றிராணியார் ஹீனன் சிறப்பான தோர் பாராட்டு வழங்கியிருக்கிறார். "கிறிஸ்துவ சமயச் சபையினர் யாவரும் அத்தியட்சர் றம்சேயை பெரிதும் உவக்கின்றனர். இவருடைய நியமனத்தினாலே கிறிஸ்துவ சபைகளின் ஒற்றுமை இயக்கம் அதிக பலனளிக்கும்" என அதிமேற்றிராணியார் கூறினர்.

"பாண்டித்தியம் நிறைந்த இவர் எதிர்காலத்தில் நிச்சயமாக எழவிருக்கும் வேதசாஸ்திர தர்க்கத்தில் அதிக உற்சாகமாகக் கலந்துகொள்ளுவார். என்னைப் பொறுத்தமட்டில், எனக்கு மிகவும் நெருங்கிய நண்பனொருவர் கன்ரபரி அதிமேற்றிராணியாராய் நியமனம் பெற்றிருப்பது மகிழ்ச்சிக்குரியதாகும். அங்கிளிக்கன் சபைப் புதிய தலைவரை இறைவன் ஆசியளித்து வழி நடத்த வேண்டுகிறேன்."

---

## 35 நீக்குரோ மேற்றிராணிமார்

அகிலத்திலுள்ள மேற்றிராணிமாரில் 35 பேர் நீக்குரோவர் ஆவர். அவர்களுள் றுகம்புவா ஆண்டகை ஒரு கருதினல். ஐவர் அதிமேற்றிராணிமார்.

அகஸ்ரின் மேற்றிராணியாரைத் தவிர எல்லோரும் ஆபிரிக்காக்கண்டத்தில் சமயப்பணி ஆற்றுகின்றனர். ஹபிற்றியின்போட்—ஒ—பிறின்ஸ் மேற்றிராசனத்தில் துணைமேற்றிராணியாயிருந்த அகஸ்ரின் ஆண்டகை அண்மையில் அரசாங்கத்தினரால் நாடுகடத்தப்பட்டிருக்கின்றார்.

---

## நிலவறைகளில் பிரார்த்தனை

ஹங்கேரி மக்கள் நிலவறைகளுக்குள் ஒன்றுகூடி வேதாகமம் வாசித்துப் பிரார்த்தனை செய்கிறார்கள் என அத்தேசத்திலுள்ள தன் சுற்றத்தவரைச் சந்தித்துத் திரும்பிய பெண் ஒருத்தி அமெரிக்காவில் கூறினள். அவள் தன் பெயரை வெளிப்படுத்த விரும்பவில்லை.

ஹங்கேரிய அரசாங்கத்துக்காக உழைப்பவர்கள் கோயிலுக்குச் செல்ல முடிவதில்லை; சென்றால் வேலைநீக்கஞ் செய்யப்படுகின்றனர்.

அந்நாட்டிலுள்ள சொத்துக்காரர் தமது உடமைகளை அரசாங்கத்துக்குக் கொடுக்கவேண்டிய நிர்ப்பந்தம் உண்டு; நன்கொடைபோன்று கைச்சாத்திடும்படி பலவந்தம் அடைகிறார்கள்.

பொருளாதார நிலைமை மிகவும் மோசமடைந்திருக்கிறது என்று தொடர்ந்து கூறினள். இருபது டொலர் பெறுமதியான உடை ஒன்றைத் தனது சிநேகிதர் ஒருவருக்கென இருநூறு டொலர் (அமெரிக்க) கொடுத்து வாங்கினள்.

பொதுவுடமையரின் பிராரம்பற்றிக் கூறும்பொழுது, அமெரிக்காவிலே ஏழு ஆடவருக்கு ஒரு கால்சட்டை விகிதமான நிலைமையுண்டு எனப் பெண்கள் கூட்டமொன்றிலே கூறப்பட்டதாக அங்கு நின்ற பெண்களில் ஒருத்தி எழுந்து நின்று, "அமெரிக்காவிலிருந்து நன்கொடையாக உடைகள் பெற்றிராதவர்கள் எவரும் இருப்பின் எழுந்து நிற்கட்டும்" எனக் கேட்டபொழுது எவருமே எழுந்து நிற்கவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தினசரி பூசை வழிகாட்டி

### அடையாளங்களின் விபரம்

| | | | |
|---|---|---|---|
| † | கடன் திருநாள் | மா. | மாசற்ற இருதயமாதாவின் பூசையைத் தெரியலாம் |
| 1 | 1-ம் வகுப்புத் திருநாள் | ம. | மரித்தோர் பூசையைத் தெரியலாம் |
| 2 | 2-ம் வகுப்புத் திருநாள் | (வி. ம.) | பூசையில் விசுவாசமந்திரம் |
| யே. | யேசுவின் திரு இருதயப் பூசையைத் தெரியலாம் | ஒ. | ஒருசந்தி நாள் |

### மாசிமாதம் — 1961

| | | | |
|---|---|---|---|
| 12 | ஞா. | 2 பஞ்சிகை ஞாயிறு (வி. ம.) | [ஊ] |
| 13 | தி. | ம காலதினம் (ஞாயிறு பூசை) | [ஊ] |
| 14 | செ. | ம காலதினம் (ஞாயிறு பூசை) அர்ச். (வலென்தீனுஸ் ஞா.) | [ஊ] |
| 15 | புத. | 1 ஒ விபூதித்திருநாள் | [ஊ] |
| 16 | வி. | காலதினம் | [ஊ] |
| 17 | வெ. | காலதினம் | [ஊ] |
| 18 | சனி. | காலதினம் (அர்ச். சிமியோன் ஞா.) | [ஊ] |

சத்திய வேத

பாதுகாவலன்

1961-ம் ஆண்டு
மாசிமாதம் 9-ந் திகதி

## தமிழ்மக்களின் எதிர்காலம்

இலங்கை சுதந்திரமடைந்த பதின்மூன்ரும் ஆண்டு ஞாபகார்த்ததினமும் இம்மாதம்4-ந் திகதியன்று வந்துபோயிற்று. இந்தத்தினம் இந்நாட்டின் பெரும்பான்மைச் சாகியத்தினருள் ஒருபாலாரான சிங்களமக்களுக்கு மகிழ்ச்சியளிக்கும் ஒருசுபதினமாகவும், மறுபாலாரான தமிழ்ப்பேசும்மக்களுக்கு மனோவேதனையளிக்கும் ஒருசோகதினமாகவும் காட்சியளிக்கலாயிற்று. இவ்விதம் இந்தச்சுபதினம் தமிழ்ப்பேசும் மக்களுக்குச் சோகதினமாகியதிலிருந்து, இலங்கைக்குக் கிடைத்தசுதந்திரம் தமிழ்ப் பேசும் மக்களுக்கு அன்று; ஆகவே, தங்களுக்கும் சுதந்திரம்வேண்டுமென்று அவர்கள் சொல்லாமல் சொல்லிக்காட்டியிருக்கின்ருர்கள். இன்றைய அரசாங்கம்“காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்” என்ற சுலோகத்தை மேற்கொண்டுபோலும் தனக்குள்ள பெரும்பான்மைப் பலத்தை ஆதாயப்படுத்திச் சமய—சாகிய சிறுபான்மையினரை அடக்கக்கூடியவரை அடக்கவும், ஒடுக்கக்கூடியவரை ஒடுக்கவும் முனைந்துநிற்பதாய்ச் செயலளவிலே காட்டிக்கொள்ளுகின்றது.

சுதந்திரதினவிழாவின்போது கண்டியிலே பிரதமர்சிறிமா ஆற்றியசொற்பொழிவில் எமதுநாட்டு மக்களின் தேசியக்கடமைகளைப் பற்றிக் கேட்டோரெல்லாம் செவிகுளிரும்படியாகத் தேன்போல மொழிந்தார். இக்கடமைகளை நிறைவேற்றிவைக்க மக்களெல்லோரதும் ஒத்துழைப்பு அவசியமென்பதை அவர் ஒப்புக்கொண்டுள்ளார். ஆனால், இந்த ஒத்துழைப்புக்கேற்ற அறிகுறிகள் சென்றசுதந்திரதினவிழாவன்று காணப்பட்டனவா? இல்லை. அங்கே கண்டிநகரில் அணிவகுப்புகளும், ஆடம்பர பவனிகளும், மேடைப் பேச்சுகளும் சம்பிரமமாக நடைபெற்றிருக்க, இங்கே யாழ்ப்பாணத்தில் சோல்பறி அரசியற்திட்டமும், சிங்களம்மட்டும்சட்டமும், நீதிமன்ற சிங்களமொழிச் சட்டமும் பாடையேற வேண்டிய காரணமென்ன? எமது நாடு அரசியல் சுதந்திரமடைந்து பதின்மூன்று ஆண்டுகள் கழிந்தபோதிலும் பொருளாதாரசுதந்திரத்தைக் கண்டடைவதென்பது பேச்சளவில்தான் நிற்கின்றது.

அரசாங்கத்தின் போக்கும், நோக்கமும் பிறவழிகளில் போய்க்கொண்டிருக்கும்போது பொருளாதார சுதந்திரத்திற்கு வழிபிறப்பது எங்ஙனம்? தேசிய கல்வித்திட்டம் என்பதும், சிங்களம்மட்டும் சட்டம் என்பதும், நீதிமன்ற மொழிச்சட்டம் என்பதும், தற்போது கலாசாரமந்திரி பாராளுமன்றத்தில் சமர்ப்பித்திருக்கும்மதவழிபாட்டுச்சட்டமும் இயற்றப்பட்டதன் குறிக்கோள் யாதென்பதைக் கண்டறிய ஆழ்ந்து சிந்திக்கவேண்டிய அவசியமேயில்லை. இதனால், பிரதமர் சிறிமா ஆசிக்கும் தேசியப் பற்றும், தியாகசேவையும் நாட்டிலுள்ள சகல மக்களிடையேயும் கைகூடுமெனக் காத்திருப்பது அசாத்தியம். சிங்களமக்களுக்குச் சிங்களமொழி எத்துணை முக்கியமோ அவ்வாறே தமிழ்ப் பேசும் மக்களுக்கும் தமிழ்மொழி அத்துணை முக்கியமானது என்பதை அரசாங்கம் உணராதபோதே தேசியக் கடமையையும், தேசியப் பற்றையும், ஒத்துழைப்பையும்பற்றி இன்றைய ஆட்சித்தலைவர்கள் போடும் கூச்சலெல்லாம் தமிழ்ப்பேசும் மக்களிடையே செவிடன்காதில் சங்கநாதஞ் செய்தவாருகவே இருந்துவரும்.

சிறுபான்மைமக்களின் நல்லெண்ணத்தையும், உண்மையானஒத்துழைப்பையும் அரசாங்கம் பெறுதவரையில் நாட்டிலே சமாதானமும், அமைதியும், சுபீட்சமும், அபிவிருத்தியும் உண்டாவது பகற்கனவாகவேயிருக்கும். தமிழரும் வாழத்தான் வேண்டும்; அவர்களையும் திருப்திப்படுத்தியே நாட்டினை ஆளவேண்டுமென்ற நல்லெண்ணம் படைத்தவர்கள் மந்திரிமாருள்ளும், ஆளுங்கட்சியினருள்ளும் இருந்தபோதிலும் இனவெறியும், மதவெறியும்பிடித்த கோடரிக்காம்புகளும் இல்லாமல் இல்லை. அதனால் இன்றையநிலையிலே தமிழ்ப்பேசும்மக்கள் “தன்கையே தனக்குதவி”என்ற படைக்கலத்தைக் கரத்தேந்தித் தமிழையும், தமிழினத்தையும் காப்பா[illegible]றவேண்டும். “எல்லாம் தமிழ்”என்ற இயக்கத்தில் சிறப்பாகஈடுபட்டுப் பேச்சிலும், எழுத்திலும், படிப்பிலும் தமிழ்மொழிக்கு முதலிடம்கொடுக்க வே[illegible]ம். மாநகரசபைகள், பட்டி[illegible]சபைகள், கிராமச்சங்கங்கள், கிராமமுன்[illegible] சங்கங்கள் ஆதியவெல்லாம் அர[illegible]ங்கத்துடனும், பொதுமக்களுடனும் சகலஅலுவல்களையும் தமிழில் மட்டுமே நடாத்தவேண்டும்.

இன்னும் அரசாங்கஉத்தியோகங்களை அதிகமாக எதிர்பாராது, அவற்றிற்கென்றுகல்வி பயிலாது அறிவைவளர்த்துப் பொருளாதாரத்தை விருத்திசெய்யக்கூடிய வழிவகைகளையெல்லாம் கையாளவேண்டும். பல்வேறு தொழில் துறைகளிலும் கவனத்தைச் செலுத்தி ஊக்கமாக உழைக்கவேண்டும். கொலை, களவு, குடிவெறிமுதலாம் தீச்செயல்களை ஒழித்து — ஆடம்பரவாழ்க்கையை ஒழித்து— அனுவசியமான செலவுகளை அறவே ஒழித்துச் சிக்கனமாக வாழ்க்கைநடத்தி வந்தால் தமிழ்ப்பேசும்மக்களின் எதிர்காலத்தைப்பற்றிக் கவலைப்படவேண்டிய காரணமேயிராது என்க.

## தபசுகாலத்தில் வரும் ஒருசந்தி, மாமிசத்தவிர்ப்பு நாட்கள்

**● ஒருசந்தி நாட்கள்**

விபூதிப் புதன்கிழமையும், பெரிய வெள்ளிக்கிழமையும் இலங்கையில் ஒருசந்திநாட்களாக அனுசரிக்கப்படவேண்டும். இந்நாட்களில் ஒருவேளை மாத்திரம், அதாவது, மத்தியானத்தில் அல்லது இரவில் முழுப்போசனம் அருந்தலாம். காலையில் இரண்டு அவுன்ஸ் நிறைக்கு உட்பட்டபோசனமும், முழுப்போசனம் அருந்தாத போசனவேளையில் 8 அவுன்ஸ் நிறைக்கு உட்பட்டபோசனமும் அருந்தலாம்.

21 வயதிற்கு மேற்பட்டவர்களும், 60 வயதிற்கு உட்பட்டவர்களுமான விசுவாசிகளுக்கு ஒருசந்தி அனுசரிக்கக் கண்டிப்பான கடமை உண்டு.

**● மாமிசத் தவிர்ப்பு நாட்கள்**

தபசுகாலத்தில் வரும் எல்லா வெள்ளிக் கிழமைகளும், விபூதிப் புதன்கிழமையும் இலங்கையில் மாமிசத்தவிர்ப்பு நாட்களாக அனுசரிக்கப்படவேண்டும். இந்நாட்களில் தரையில் வாழும் மிருகங்கள், பறவைகள், முதலியவைகளின் மாமிசங்களையும், அவற்றின் சாரங்களையும் நீக்கி உணவருந்தவேண்டும். ஆனால், இந்நாட்களில் முட்டை, பால், தயிர், பாற்கட்டி, வெண்ணெய், கொழுப்பு முதலிய உணவுப்பொருட்களை உபயோகிக்க உத்தரவுண்டு.

ஏழுவயதிற்கு மேற்பட்ட சகலகிறிஸ்தவர்களும், மாமிசத்தவிர்ப்புக் கட்டளையை அனுசரிக்கக கடமைப்பட்டவர்களாய் இருக்கிருர்கள்.

வறுமை, கடினவேலை, பெரும் இடைஞ்சல் முதலிய விசேடகாரணங்களினிமித்தம் ஒருசந்தி, மாமிசத்தவிர்ப்புக் கடன்களை அனுசரிப்பதில் கஷ்டப்படுவோர் தங்கள் விசாரணைப் பங்குக் குருவானவரிடமிருந்து இளக்கார உத்தரவு பெற்றுக்கொள்ள வேண்டும்.

## பாஸ்காக்கடமை நிறைவேற்றுவதற்குரிய காலம்

“பாஸ்காக் காலத்தில் ஒருமுறை என்கிலும் தேவநற்கருணை பெறுவாயாக”, என்பது திருச்சபையின் சட்டமாகும். இச்சட்டத்தை அனுசரிக்கப் புத்திவிபரம் அறிந்த சகல கிறிஸ்தவர்களுக்கும் கடமையுண்டு. திருச்சபைப் பொதுஒழுங்கின்படி இக்கடமையை நிறைவேற்றுவதற்குரிய காலம் குருத்தோலை ஞாயிறுதொடக்கம், உத்தானத் திருநாளை அடுத்து வரும் ஞாயிற்றுக்கிழமை மட்டும் நீடித்துள்ளது. ஆனால், இலங்கையில் விசேட உத்தரவின் நிமித்தம் பாஸ்காக்கடமையை விபூதித் திருநாளில் இருந்து அர்ச். தமதிரித்துவத்தின் திருநாள்வரையும் அதாவது, இவ்வருடம் மாசிமாதம் 15-ம் திகதியிலிருந்து வைகாசிமாதம் 28-ம் திகதி வரையும் நிறைவேற்றலாம்.

## சுயமறுப்பில் மறுமலர்ச்சி உண்டு!

பல சந்தர்ப்பங்களிலும் பல்வேறு வழிகளிலும் சுயமறுப்பின், ஒறுத்தலின் அவசியத்தைக் கிறிஸ்துநாதர் வற்புறுத்தியுள்ளார். “எவனாவது என்னைப் பின்செல்லவிரும்பின், அவன் தன்னை மறுத்துத் தன் சிலுவையை நாள்தோறும் சுமந்து என்பின்னே வரவேண்டும்” (லூக். 9. : 23;). இதை அர்ச். சின்னப்பர் கலாத்தியருக்குஎழுதும்போது “கிறிஸ்துவைச் சார்ந்தவர்கள் தங்கள் சரீரத்தை அதன் ஆசைபற்றுதல்களுடன் சிலுவையில் அறைந்துவிட்டார்கள்” என விரித்துரைத்தார் (கலா. 5, 24). நாம் ஏன் சுயமறுப்புச் செய்யவேண்டும்?

**அணைபோடப்பட்ட சக்தி:**

எமது ஆசைபற்றுதல்கள் எம்மை அலைத்துலைக்க இடங்கொடாமல் நாமே எமது எசமானுவதற்குச் சுயமறுப்பு அகத்தியமானது என்பது இயற்கை அடிப்படையில் தெளிவாகிறது. ஒருவன் தனது குற்றமற்ற ஆசைகள் நாட்டங்களுக்கும் சிலசந்தர்ப்பங்களிலாவது மறுப்புக்கூற, தடைபோடப் பயின்றுகொள்ளாவிடில், தானே தன் எசமானுகும் நிலையை அடையமாட்டான். தீமையை எதிர்க்கும் சக்தி எம்மிடம் இருக்கவேண்டுமாயின் நன்மையான காரியங்களிலும் கூட இஷ்டபூர்வமான பரித்தியாகம் செய்துபழகி, எமது சித்தத்தைப் பலப்படுத்தவேண்டும். இந்த உளத்தத்துவ கொள்கையைத் திருச்சபை நெடுங்காலமாகக் கைக்கொண்டு வருகிறது. ஆகவேதான், பலதருணங்களில் உபவாச விரதங்களை அனுசரிக்கும்படி திருச்சபை விசுவாசிகளைப் பணித்து, சுயமறுப்பை அன்ருடைய வாழ்க்கையில் அனுட்டிக்கும்படி தூண்டுகிறது.

**பழுதுற்றதைத் திருத்துதல்**

கடவுள் எமக்களித்திருக்கும் சக்திகளையும் கொடைகளையும் நாம் துர்ப்பிரயோகஞ் செய்திருந்தால் அந்தப் பிழைகளைத்திருத்த வேண்டும். தளம்பிய சமநிலையைத் திரும்பவும் உண்டாக்கும்பொருட்டு எம்மை நாம் ஏதோ ஒருவிதத்தில் தண்டிக்கவேண்டும். இது நீதியும் நியாயமுமாகும். இத்தண்டனையைக் கொடுப்பதற்கு நல்லவழி யாதெனில் நாம் துர்ப்பிரயோகஞ் செய்தவைகளை இஷ்டபூர்வமாகப் பிரயோகியாமல் விடுவதே. உண்பதிலும் குடிப்பதிலும் நாம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# லூர்து சுனையால் குணமான நாத்திகர்

**லூயிஸ் ஒலிவறி ஒரு நாத்திகர். பிரான்ஸ் தேச நீஸ் நகரைச் சேர்ந்தவர். தொழிலாளி. அப்பகுதியின் கம்யூனிஸ்த கட்சியின் பொருளாளர். இவருக்குவந்த தீராத நோயைத் தீர்த்தது லூர்துபதியின் அற்புத நீரூற்று. இவ்வற்புதம்பற்றி அன்னார் அமெரிக்கன் வீக்லி என்னும் சஞ்சிகையில் எழுதிய கட்டுரையின் தமிழாக்கம் : — சா. பெ.**

எனது கம்மியூனிஸ்த தோழர்கள் என்னைக் கைவிட்டுவிட்டனர். அவர்களிருக்குமிடம் யான் சென்ருல் ஏதோ குஷ்டரோகியைப் பார்ப்பதுபோல் அருவருப்புடன் நோக்குகின்றனர். அவர்களின் தோழமையைக் கைவிட்டுவிட்டேன். இன்று எனது ஆருயிர்த் துணைவன் ஜோர்ஜ் ரோறெலி என்னும் பையனே. இவன் பார்வையற்றவன். இச்சிறுவனுக்குப் பார்வையளிக்க வேண்டும் என்று தேவ அன்னையிடம் தினசரி வேண்டிக்கொள்கிறேன்.

1913-ம் ஆண்டு வைகாசித்திங்கள் 2-ம் நாளில் நீஸ் நகரில் பிறந்தேன். எனது தந்தை முதலாவது உலகமகா யுத்தத்திற் சேவையாற்றியபோது கொல்லப்பட்டார். அரசாங்கம் என்னை வளர்த்தது. பதினைலாவது வயதாகும்போது மின்சாரத் தொழிலாளியாகப் பயிற்சிபெற்றுத் தொழிலாரம்பித்தேன்.

1956-ம் ஆண்டு சித்திரைமாதம் நீஸ் நகரிலுள்ள புனித ரோச் மருத்துவ நிலையத்துக்கு என் சேவை தேவைப்பட்டது. அங்கு மின்சாரக் கம்பிகளை மீண்டும் பொருத்தும் பணியில் ஈடுபட்டேன். உயர்ந்த ஏணி ஒன்றின் உச்சியில் நின்று கருமமாற்றினேன். ஏணி திடீரெனச் சாய்ந்தது. எதிர்பாராத இந்நிகழ்ச்சி என்னை உயிரற்றவன் போலாக்கியது. மீண்டும் உணர்வு வந்தபோது நீஸ் நகர பாஸ்தூர் மருத்துவ இல்லத்தின் படுக்கையொன்றில் காணப்பட்டேன். அதுவரை அனுபவித்திராத கொடும் வேதனை என்னை வாதித்தது. அவயவங்களை அசைக்கமுடியாதிருந்தது. நரம்பு நிபுணர் டாக்டர் ஜீன் டுப்புளே எனக்குச் சிகிச்சையளித்தார். ஒரு மாதச் சிகிச்சையின் பின்னரும் வலது கரத்தையோ அன்றேல் காலையோ அசைப்பது கஷ்டமாயிருந்தது. அத்துடன் பாரிசவாதம் என்னைப் பீடித்துக்கொண்டது.

என் நிலைகண்டு மனவருத்தமுற்றேன். முதல் மணத்தினுல் யான் பெற்ற செல்வன், இருபத்திரண்டு வயதுடையவன் அப்போது அல்ஜீரிய இராணுவத்தில் கடமையாற்றிக் கொண்டிருந்தான். எனது அடுத்த மூன்று செல்வங்களையும் மனைவியையும் தற்போது பராமரிப்பதெங்ஙனம்? மீண்டும் யான் குணமுறுவது கடினம் என மருத்துவ நிபுணர்கள் பலரும் மொழிந்தனர்.

ஒருநாள் என்துயரை என்னைச் சந்திக்க வந்த புனித ரோச் மருத்துவ நிலையக் குரவரிடம் கூறினேன். நீங்கள் லூர்துபதிக்குச் சென்ருலென்ன? என அவர் பதிலாக வினவினுர். ஒரு கம்மியூனிஸ்தனுன யான் சுடச்சுடப் பதிலளித்தேன். மனித பெலத்தால் குணமாக்க முடியாதவொன்றை நீரூற்றில் குளிப்பது குணப்படுத்துமென்பதை இந்த இருபதாம் நூற்ருண்டிலுமா நம்புகிறீர்கள் என வினவினேன். பதிலளிக்க முடியாதவராய்த் திரும்பினுர் அக்குரவர்.

யான் அவ்வமயம் எனது சகோதரியின் குடும்பத்தவருடன் வசித்தேன். தினசரி எனது புதல்வரும் துணைவியும் என்னைச் சந்திக்க வருவர். அன்று மாலை என் துணைவியிடம் குரவர் கூறிய செய்தியைக் குறிப்பிட்டேன். அப்படியும் செய்துபார்க்கலாமே என அவள் பதிலளித்ததைக் கேட்டு யான் ஆச்சரியவசத்தனுனேன். சகோதரி குடும்பத்தவரும் இதை அடிக்கடி வற்புறுத்தினர். எல்லாம் அறிவுகெட்ட ஜென்மங்கள் என அத்தருணங்களில் என் உதடுகள் முணுமுணுக்கும்.

எனது கம்மியூனிஸ்த நண்பர்கள் சிலர் இம்முயற்சிபற்றி அறிந்தனர். மனைவியின [illegible] பத்தைப் பூர்த்திசெய்ய யாத்திரை போய்வாலாமெனவும் அதனுல் எனது கம்மியூனிஸ்த விசுவாசத்துக்குப் பங்கம் ஏற்படாதென்றும் அன்னார் கூறவே யாத்திரை போவதெனத் தீர்மானித்தேன். நீஸ் நகரின் சிறந்த மருத்துவரும், லூர்து மருத்துவ நிபுணர் குழு அங்கத்தவருமான டாக்டர் ஸ்ரோபினு என்பவர் என்னைப் பரிசோதித்துக் குணமாக்கமுடியா நோய் கொண்டவர் என அத்தாட்சிப்பத்திரம் வழங்கினுர்.

எனது மூன்று செல்வங்களையும் ஆசைதீர முத்தமிட்டேன். இடது கரத்தால் என் துணைவியை அணைத்துக்கொண்டு பிரியாவிடை கூறினேன். நீஸ் நகர பிதாக்களுளொருவரும், லூர்துபதியில் பல வருடங்களாக நோயாளிகட்கு இலவச சேவையாற்றி வருபவருமான ஜீன் லூயிஸ்கார்டனின் துணையுடன் பிரயாணமானேன்.

ஆடி 2-ம் நாள். அதிகாலையில் லூர்துபதியையடைந்தோம். அதிக பசியினுல் களைத்துப்போயிருந்தேன். ஆயின் மருத்துவத்தாதிமார் என்னையும், மற்றும் 84 நோயாளர்களையும் ஏழு வியாகுலங்களின் மருத்துவ மனைக்கு அழைத்துச் சென்றனர். அங்கிருந்து மகா தேவாலயத்துக்கு முன் கொண்டுசெல்லப்பட்டோம். அம்மைதானத்தில் ஏராளமான யாத்திரிகர்கள் காணப்பட்டனர். நோயாளர்கள் மடக்குக் கட்டில்களிலும் சாய்மானக் கதிரைகளிலும் அமர்ந்தனர். திவ்விய பூசை ஆரம்பமா[illegible] செபம் சொல்வதன் நன்மை[illegible]யான

(தொடர்ச்சி 8-ம்பக்கம்)

---

அளவு கடந்திருந்தால் சாதாரணமாய்க் கொள்ளும் உணவின், பானத்தின் அளவைத்தானும் குறைத்து ஈடு செய்வது முறையானதாகும். எமது கடமைகளை அசட்டைபண்ணுமளவுக்கு, சொகுசையும் சுகிப்பையும் மிதமிஞ்சித் தேடியிருந்தால் நாம் எமது குற்றங்களைத் திருத்த மனதாயிருக்கிருேமெனக் கடவுளுக்குக் காண்பிக்க சொற்ப வசதியீனத்தையோ, துன்பத்தையோ அனுபவிப்பது சரியானதே.

### கிறிஸ்துவைப் பின்பற்றல்

சுயமறுப்பைக் கைக்கொள்ள மற்றுமொருகாரணமென்னவெனில், எமது ஆண்டவரின் கஷ்டமும் துன்பமும் நிறைந்த வாழ்க்கையைப் பின்பற்றுவதனுல் தேவனுக்கு எமது அன்பைக் காட்டுகிருேம். எமது இரட்சகரைப் பின்பற்றுங்கடமையை அவரே தெளிவாகக் கூறியிருக்கின்ருர். "எவனுவது என்பின்னேவர இஷ்டமானுல் அவன் சிலுவையை எடுத்துக்கொண்டு என் பிறகே வரக்கடவான்." சுவிசேஷத்தைப் படிக்கும்பொழுது கிறிஸ்துநாதர் சுயமறுப்பும், தற்பரித்தியாகமும் செறிந்த வாழ்க்கையை நடத்தினுர் என்பது தெளிவாகின்றது. அவர் தமது போதக வாழ்க்கையின் ஆரம்பத்தில் நாற்பது இரவும் பகலும் உபவாசமாயிருந்தார். வாழ்க்கை முழுவதையும் ஏழ்மையில் கழித்து வறியோர் படும் துன்பத்தை முகமலர்ச்சியுடன் ஏற்றுக்கொண்டார்.

எமது இரட்சாபெருமானைப் பின்பற்றிக் குறிப்பிட்டகாலங்களில் உபவாசமாய் இருக்கும்படி திருச்சபைத்தாய் தன் மக்களைக் கேட்கின்றது. வெள்ளிக்கிழமைகள் கிறிஸ்துவின் மரணத்தின் ஞாபகமாக மாமிசத்தவிர்ப்பு நாள்களாகக் குறிப்பிட்டிருக்கின்றன. எமது இரட்சகரின் நாற்பது நாள் உபவாசத்தையும் பெரிய வெள்ளியன்று அவர்பட்ட பாடுகளையும் மரணத்தையும் ஆண்டில் ஒருமுறை நினைவுறுத்துகிறது தபசுகாலம்.

தன்னடக்கம்பயிலுவதில் நாமெல்லோரும் அதிகமுயற்சிசெய்ய இடமுண்டு. பெருங்கடமைகளில் பிரமாணிக்கங்காணும் பொருட்டு சிறு சுயமறுப்புக்கள் செய்வதற்கு அன்ருடைய வாழ்க்கையில் அநேக வாய்ப்புக்கள் உண்டு. சுயமறுப்பைக் கைக்கொள்ளும் வாழ்க்கை உண்மையாகவே "தேவஇராச்சியத்தையும் அதன் நீதியையும் முதன்மையாக"த் தேடுவதாகும். இப்பரந்த உலகில் இதைவிட முக்கியத்துவம் பெறவேண்டியது வேறென்ன உண்டு?

---

# தாயே! எழுந்தருள்க!

"ஜெயம்"

பொன்னிலவு பாதமிசை பூணுகின்ற தாயே!
புனிதமலர் வதனமருள் பொழிகின்ற தாயே!
மின்னுகதிர்ப் பகலாடை மீதணிந்த தாயே!
மேதினியிற் பாவிகளை மீட்டருளுந் தாயே!
பன்னிருதா ரகைமகுடஞ் சூடுகின்ற தாயே!
பங்கயநற் செங்கைசெப மாலைகொண்ட தாயே!
இன்னலிடை யாதரவே யீந்தருளுந் தாயே!
எங்களையாட் கொண்டருள எழுந்தருளு வீரே!

●

புண்ணியர்கள் மனமாரப் போற்றுகின்ற தாயே!
பொன்னுலக தூதர்கணம் புகழ்கின்ற தாயே!
கண்ணியர்கள் நெஞ்சிருத்திக் கைகுவிக்கும் தாயே!
கற்புநிறை யற்புதமாய்க் காணுகின்ற தாயே!
தண்ணளியும் தண்ணொளியும் தந்தளிக்கும் தாயே!
தஞ்சமடைந் தோர்களையும் தாங்குகின்ற தாயே!
எண்ணரிய நன்மைவளம் ஈந்தருளும் தாயே!
எங்களையாட் கொண்டருள எழுந்தருளு வீரே!

●

சொல்லாரும் துதிபடைத்த துங்கமுள்ள தாயே!
சோகமறத் துடைத்துவியன் சுகமளிக்கும் தாயே!
பொல்லாத தீமைகளைப் போக்குகின்ற தாயே!
பொறுமையுரு வடிவான புதுமையுள்ள தாயே!
எல்லார்க்கு மெல்லாமே இறைக்கின்ற தாயே!
இளைப்பாற்றி யின்துறையாய் இருக்கின்ற தாயே!
இல்லாரைச் செல்வமிக வெய்துவிக்கும் தாயே!
எங்களையாட் கொண்டருள எழுந்தருளு வீரே!

●

ஆக்கத்தை யாசையொடு மருளுகின்ற தாயே!
அஞ்ஞயபாழ் நாத்திகத்தை அழிக்கின்ற தாயே!
தூக்கத்தை யடியோடு தொலைக்கின்ற தாயே!
துயரிடையில் துணையாக விருக்கின்ற தாயே!
ஊக்கத்தை யுறுதிபெற உதவுகின்ற தாயே!
உத்தமத னத்தினுயர் வானதிருத் தாயே!
ஏக்கத்தை நீக்கியீ டேற்றுகிற தாயே!
எங்களையாட் கொண்டருள எழுந்தருளு வீரே!

●

பத்தியுறை லூர்துபதிக் காட்சிதந்த தாயே!
பரமனையீங் கீன்றெடுத்த பவமறியாத் தாயே!
சத்தியத்தின் நல்லுருவச் சாட்சியான தாயே!
சஞ்சலத்தி லேமகிழ்வு சாந்திபொழி தாயே!
சித்திபல செய்யவல்ல திறமையுள்ள தாயே!
செகமனைத்து மரசாளும் செங்கோல்கொள் தாயே!
எத்திசையும் புகழ்பரக்கு மேற்றமுள்ள தாயே!
எங்களையாட் கொண்டருள எழுந்தருளு வீரே!

---

## லூர்துபதியில் இன்னேர் புதுமை

1952-ல் லூர்துபதியில் சுவிற்செலாந்தைச்சார்ந்த ஆசீர்வாதப்பர் சபைச் சந்நியாசி **தோம் லெயோன் சூவகர்** குணமடைந்ததை ஒரு புதுமையெனப் பிரகடனஞ் செய்திருக்கிருர் லோசன் மேற்றிராணியார் சாரியர். லூர்தின் சர்வதேச வைத்தியர் சங்கம் இந்தக் குணமடைதலை வைத்திய ஞானத்தின்படி விளக்கமுடியாது என 1959-ல் அறிக்கையிட்டது.

28 வயதினராயிருந்த லெயோன் சந்நியாசியார் — நரம்பு வியாதியால் பீடிக்கப்பட்டு, நடக்கமுடியாத நிலைமையில் தலையிலிருந்து கால்வரை வேதனை நிறைந்தும், பார்வையிழந்தும், கைகால் முடங்கியும் லூர்துக்குச் சென்ருர்.

சற்பிரசாத ஊர்வலத்தின்போது சடுதியாகத் தாம் குணப்பட்டுவிட்டதாக உணர்ந்தார். பிறர் உதவியின்றித் தமது விடுதிக்குத் திரும்பிப்போனுர்.

அந்நாளிலிருந்து இற்றைவரைக்கும் ஆண்டுதோறும் லூர்துக்குச் சென்று நோயாளரான யாத்திரிகர்களுக்கு சமையற்காரனுகப் பணிஆற்றி வருகிருர்.

தற்பொழுது 36 வயதினராயிருக்கும் லெயோன் சகோதரர் தமது 21-ம் வயதில் ஆசீர்வாதப்பர் சபையிற் சேர்ந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொழிலாளர் பக்கம்

# தொழிலாளரின் உரிமைச் சாசனம்

## 13-ம் சிங்கராய பாப்பரசரின் பொதுநிருபம்

### 2. தனிச்சொத்து உரிமை:

1-ம் பாகம் (தொடர்ச்சி)

**(அ) தனிச்சொத்து உரிமை மனிதனுக்கு இயல்பாயுள்ள சுதந்திரம்:**

ஒவ்வொரு மனிதனுக்கும் தனக்கென்று சொத்துவைத்திருக்க இயல்பாகவே சுதந்திரமுண்டு. இது மனிதனுக்கும், பிராணிகளுக்கும் உள்ள வித்தியாசத்தின் ஓர் அம்சம். மிருகத்திற்குத் தன் நடத்தையைக் கட்டுப்படுத்தும் சக்திகிடையாது. அது இரண்டு இயல்பூக்கங்களைப் பின்பற்றி நடக்கின்றது. இந்த இயல்பூக்கங்களே அதன் சக்தியைத் தூண்டி அதை வளரச்செய்கின்றன. பிராணியின் செயல்களைத் தீர்மானிப்பதும் இந்த ஊக்கங்களே. ஆதலால் இரண்டு காரியங்களில் ஒன்றைவிட்டு மற்றொன்றைத் தெரிந்துகொள்ளும் பகுத்தறிவு அதற்குக் கிடையாது. இந்த இயல்பூக்கங்களிலொன்று தற்பாதுகாப்பு இயல்பூக்கம், மற்றது இனவிருத்தி இயல்பூக்கம். இந்த இரண்டு இயல்பூக்கங்களின் நாட்டங்களையும் பிராணி தன் புலன் எல்லைக்குள் அடங்கிய பொருள்கள் மூலமாய் அடையக்கூடும். பிராணி தன்புலன் எல்லையைக்கடந்து போக முடியாது. ஏனெனில், பிராணியைச் செயலுக்குத் தூண்டுவது புலன்களே; புலன்கள் காட்டும்வழியில் மட்டுமே அது செல்லக்கூடும்.

ஆனால், மனிதனுடைய நடத்தை இதினின்று முற்றிலும் வேறுபட்டது. ஒருபுறம் பிராணிவர்க்கத்திற்குள்ள எல்லாச்சக்தியும் அவனுக்கிருக்கின்றன; ஆதலால் குறைந்தபட்சம் மற்றப் பிராணிகளைப் போலாவது அவன் உலகப்பொருள்களை அனுபவிக்கிறான். ஆனால், மிருகசுபாவம் எவ்வளவு பூரணசக்தி உடையதாய் இருந்தாலும், அதற்கும் மனித சுபாவத்தின் தத்துவங்கட்கும் எவ்வளவோ வித்தியாசம் உண்டு. நியாயமாய்ப் பார்க்கப்போனால், மிருகசுபாவம் மனிதனுக்குக் கீழ்ப்படிந்து ஒருவேலையாளைப்போல ஊழியஞ்செய்ய ஏற்பட்டதென்று நன்குவிளங்கும். மனிதராகிய நம்மிடம் அதிக முக்கியமாக விளங்கும் அம்சம் பகுத்தறிவு இதுதான் நம்மை உண்மையில் மனிதராக்குவது. இப்பகுத்தறிவே மனிதன் வேறுஇனத்தைச் சேர்ந்தவன், மிருகம் வேறு இனத்தைச் சேர்ந்தது என்று வேறுபடுத்திக்காட்டும் விசேஷ அம்சம். மனிதன் ஒருவனுக்கே பகுத்தறிவு உண்டுஎன்ற இந்த ஒருகாரணமே அவனுக்குத் தனிச்சொத்து உரிமை அவசியம் என்று காட்டுவதற்குப் போதியதாகும். பிராணிகள் தங்களுக்கு அவசியமான பொருள்களை அந்தந்த நேரத்தில் தேடிக்கொள்கின்றன. மற்றப்படி அவற்றின்மீது சொந்தம் பாராட்டுவதில்லை. இவ்விதம் மனிதனுக்கு பொருள்களை அவசியமானபோதுமட்டும் உபயோகிப்பதற்குச் சுதந்திரம் இருந்தால் போதாது; அவைகளை நிலைமையாகவும், சாஸ்வதமாகவும் வைத்து அனுபவிப்பதற்கும் அவனுக்குச் சுதந்திரம் வேண்டும். உபயோகத்தினால் அழிந்துபோகும் பொருட்களை மட்டுமல்ல உபயோகப்படுத்தின பின்னும் பயன்படத்தக்க பொருள்களையும் சொந்தமாகக் கொண்டிருக்க அவனுக்கு உரிமை வேண்டும்.

அன்றியும், மனிதனுடைய இயல்பைச்சற்று ஆராய்ந்து பார்த்தால், இவ்வுண்மை இன்னும் நன்றாகவிளங்கும். அவன் தனது புத்தியினால் கணக்கற்ற விஷயங்களைப்பற்றி ஆராய்கிறுன். பின்னால்வரக்கூடிய காரியங்களையூகித்து தற்கால சம்பவங்களோடு ஒப்பிட்டு முன்யோசனையோடு நடந்துகொள்ளும்சக்தி அவனுக்கு உண்டு; அவனே தனது செயல்களை நடத்தும் கர்த்தா சகலத்தையும் ஆண்டுநடத்தும் கடவுளுடைய பராமரிப்பில், அவருடைய அதிகாரத்துக்கும் கற்பனைகட்கும் உட்பட்டு, மனிதன் தன் நடத்தையை ஒழுங்குபடுத்தக்கூடியவன். ஆகையால், விஷயங்களைச் சீர்தூக்கிப்பார்த்து, தெரிந்துசெயல்புரியும் ஆற்றல் அவனுக்கு உண்டு. இவ்விதம் அவன் தெரிந்து செயல்புரிவது அவனுடைய தற்காலிகமான சுகவாழ்வை அடுத்தகாரியங்களில் மட்டுமல்ல, வருங்காலத்தில் தனக்கு அனுகூலம் உண்டாகும்என்று எதிர்பார்க்கிற காரியங்களிலும், இந்தயூக சக்தியை உபயோகித்து நடக்கிறான். ஆகையால், தற்காலிகமான பூமியின் விளைவில்மட்டும் அவன் சொந்தம் பாராட்டலாம் என்று சொல்லக் கூடாது; அந்த விளைவிலிருந்து அவனுடைய சம்ரட்சணைக்கு வேண்டிய பொருள்களைத் தேடிக்கொள்ளவேண்டியிருப்பதால், விளைவுமட்டுமல்ல, நிலமும் அவனுக்குச் சொந்தமாய் இருக்கவேண்டும். மனிதனுடைய தேவைகள் ஒருநாளோடு முடிந்துபோவதில்லை; திரும்பத், திரும்ப அதே தேவைகள் ஏற்படுகின்றன. இன்று நமது தேவைகளைப்பூர்த்தி செய்துகொண்டாலும், நாளைக்கு வேண்டிய பொருள்கள் இன்னும் தேவையாய் இருக்கின்றன. இதனால் மனிதனுடைய அனுதின சம்ரட்சணைக்காக இயற்கையில் ஒருகுறையாத களஞ்சியம் இருக்கவேண்டும். பூமியின்வற்றாத செழுமையே இந்தக் களஞ்சியமாம்.

அரசாங்கம் ஏற்படுவதற்கு முன்பே மனிதன் இருந்தான். ஆதலால், மனிதனுக்கு அவனுடைய உயிர்வாழ்க்கைக்கு ஏதுவான பொருள்களைத் தேடிக் கொள்ளும்படி ஏற்பட்டஉரிமை, அரசாங்கஉரிமைக்கு முற்பட்டது. கடவுள் பூமிமுழுவதையும் மனிதர் எல்லாருடையவும் உபயோகத்திற்காகவே படைத்தார். இதனால், மனிதன் தனிச்சொத்துரிமை பாராட்டுவது நியாயத்திற்கு விரோதம் என்று எண்ணக்கூடாது. உலகத்தைக் கடவுள் பொதுவாக எல்லாமனிதருடைய உபயோகத்திற்கும் விட்டிருக்கிறார் என்பது உண்மையே; அதனால் ஒவ்வொருவனும் வித்தியாசமின்றித் தன்விருப்பப்படி அதைக் கைக்கொண்டு அனுபவிக்கலாம் என்று அர்த்தமில்லை. உண்மையில் பூமியின் எந்தப்பாகமும் பிரத்தியேகமாக ஒருவருக்குங் கொடுக்கப்படவில்லை. ஒருவன் அதில் எவ்வளவைத் தனக்குச் சொந்தமாக்கிக் கொள்ளலாம்என்பது அவனுடைய தனிஉழைப்பையும் அவன் குடியிருக்கும் நாட்டின் சட்டத்தையும் பொறுத்ததாகும். அன்றியும் பூப்பரப்பை அநேகர் பகிர்ந்து கொண்டு தங்களுக்குச் சொந்தமாக வைத்திருந்தாலும் பூமியில் இருந்துதான் எல்லாமனிதனுக்கும் சம்ரட்சணை நடக்கிறது.

இதனாலும் தனிச்சொத்து உரிமை இயற்கைவிதிக்கு உட்பட்டதென்றே காண்கிறோம். உயிர்பிழைக்கவும், சுபீட்சமான நல்வாழ்க்கைக்கும் அவசியமானபொருள்கள் அபரிதமாகப் பூமியில் இருந்து உண்டாகின்றன. இதுஉண்மை. இருந்தாலும், பூமி பலன் [illegible] வேண்டுமானால் மனிதன் (சக்)தியையும் கருத்தையும் செலுத்தி பூமியைப்பண்படுத்திப்பயிரிடவேண்டும். இவ்விதம் இயற்கையின் பலனை எதிர்பார்த்து அவன் தனது மனோசக்தியையும், தேவபலத்தையும் கொண்டு உழைக்கும்போது, அவன் பண்படுத்தும் நிலப்பகுதி அவனுக்குச் சொந்தமாகிறது. ஏனெனில், அவன் பண்படுத்தும் பகுதியில் அவன் ஒரு விதத்தில் தனது ஆள்தன்மையின் முத்திரையைப் பதியச்செய்கிறான், என்று சொல்லலாம். இதனால அவன் பண்படுத்தும் நிலபாகம் அவனுக்குச் சொந்தமாய் இருக்கவேண்டுமென்பது நியாயமே. அவன் இவ்விதம் பாடுபட்டுப் பண்படுத்தும் நிலத்தின் மீது சொந்தம் பாராட்டுவதை எவரும் தடுக்கலாகாது. ஏனெனில், மனிதன் தன்திறமையையும், உழைப்பையும் செலுத்தி உழுது பயிர்செய்யும் நிலம் தனது முந்தினதன்மையில் முற்றிலும் மாறுதல் அடைகிறது. முன்னால் காடாயிருந்தபூமி இப்போது பண்பட்டு விளைநிலமாயிருக்கிறது. முன்னாள் ஒன்றும் விளையாததரிசாய் இருந்தது இப்போது ஏராளமான பலனைக்கொடுக்கும் நல்நிலமாகிறது. இவ்விதம் நிலத்தின் தன்மையை மாற்றிப் பண்படுத்திய மனிதனுடைய உழைப்பு, நிலத்தினின்றும் பிரிக்க முடியாத விதத்தில் அதனோடு கலந்து போயிற்று என்று சொல்லலாம். இந்த உழைப்பின்பயனை உழைப்பாளிக்கே இல்லையென்று, இன்னொருவன் அதைக் கைப்பற்றி அனுபவிக்கவிடுவது முறையாகுமா?

ஆகையால், சொத்துப்பங்கிடு முறைக்கு ஆதாரமான உண்மைகளும், தனிச்சொத்து உரிமையின் அனுபவத்திற்கும் அடிப்படையான கொள்கைகளும் உலகில் எல்லாமனிதர்களுக்கும் தெரிந்தவையே. ஏனெனில், இது இயற்கைப் பிரமாணம். இதற்கு விரோதமான கோட்பாடுகளைக் கொண்டிருந்தவர்கள் வெகுசிலரே. அவர்களுடைய முயற்சிகளெல்லாம் இந்தக் கொள்கைகளையும் அவற்றின் அனுசாரங்களையும் பாதிக்கவில்லை. மேலும், மனிதவாழ்க்கையின் அமைதிக்கும், சமாதானத்திற்கும் தவறாதமார்க்கம் இதுதான் என்று எல்லாருக்கும் தெரியும். தேசசட்டங்களும் இதை வலியுறுத்துகின்றன. தேசசட்டங்கள் நியாயமானவையாயிருந்தால் இயற்கைப் பிரமாணங்களுக்கு நாம் உட்பட்டிருப்பதுபோல அவைகளுக்கும் உட்பட்டிருக்கிறோம். அன்றியும், பிறருக்குரிய பொருட்களை அபேட்சிக்க முதலாய்க் கூடாதென்ற கடவுளுடைய கற்பனையும்ஒன்று உண்டல்லவா? "உன் அயலானுடைய மனைவியையோ, வீடுநிலங்களையோ, ஊழியக்காரிகளையோ, அவனுடைய மாடுவேசரிகளையோ அவனுக்கு உடைத்தானவைகளுள் யாதொன்றையுமோ, நீ அபேட்சியாதிருப்பாயாக." (உபா. 5, 21)

(தொடரும்)

---

**திரு. வஸ்தியாம்பிள்ளை**
**யேம்ஸ் அரசரெட்டிணம் அவர்கள்**
**அமரபதம் அடைந்த**
**21-ம் வருட ஞாபகம்**

எங்கள் நேச பத்தாவும், அருமைத் தந்தையுமாகிய வஸ்தியாம்பிள்ளை யேம்ஸ் அரசரெட்டிணம் அவர்கள் இறைவனடி சேர்ந்த 21-ம் வருடம் 10-2-61-இல் பூர்த்தியாகிறது. இதைக் கண்ணுறும் சகலரும் கருணையுடன் அவரின் ஆன்ம சாந்திக்காக வேண்டிக்கொள்ளும்படி கேட்டுக்கொள்ளுகிறோம்.

இரக்கமுள்ள யேசுவே, இவருக்கு நித்திய இளைப்பாற்றியைக் கொடுத்தருளும் — முடிவில்லாத பிரகாசம் இவருக்குப் பிரகாசிக்கக் கடவது. ஆமென்.

இவரைப் பிரிந்து துயருறும்,
மனைவியும், மக்களும்.

"ராணி ஸ்டான்"
ஸ்ரேசன் றேட், மன்னார்.

---

## கோட்டு விற்பனவு விளம்பரம்

**இல. M. B. 3311**

மானிப்பாய்

1. சபாபதி சவுந்தரநாயகமும்
2. பெண் நாகரெத்தினமும்

— வழக்காளிகள்.

எதிராக

வண்ணார்பண்ணை மேற்கு,
பாப்பங்குள றேட்

1. மீரா லெவ்வை மரக்காயர் முகமது மீரான் மொகிதீனும்
2. பெண் சுலுத்தான் மொகிதீன் நாச்சாயர், மானிப்பாய்
3. சின்னத்தம்பி இராசநாயகம்

— எதிராளிகள்.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M. B. 3311-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பின்னால்விபரிக்கப்படும் ஆதனம் 1961-ம் ஆண்டு பங்குனிமாதம் 3-ம் திகதி புதன் கிழமை (8-3-1961) பிரபகல் 2 மணி தொடக்கம் அக்காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: ரூபா 1,688-க்கு இன்னும், ரூபா 1,000-க்கும் 30-3-60 தொடக்கம், தீர்வைத் திகதி 22-6-60 வரைக்கும் 10வீத வட்டியும், அதன்பின் கூடிய முழுத்தொகைக்கும் 5வீத வட்டியும் சொடுக்கும்வரை இறுக்கவேண்டும். கோட்டுச் செலவு ரூபா 204-77சதம். மேற்படி செலவுக் கணக்கால் கொடுத்த ரூபா 150 கழித்து மிகுதி.

### காணி விபரம்

வடமாகாணம், யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வண்ணார்பண்ணை கோவிற்பற்று, வண்ணார்பண்ணை, வடமேற்கு இறை "ஒற்றைப் புளியடி" என்னும் காணி நில. பர ஒன்றும் (1), வீடும், செய்பயிரும் தெற்கெல்லையிலிருக்கும் செய்பயிர் வான்பயிரும், கிணற்றுப்பங்கும். எல்லை: கிழக்கு—மொகிமெட் உசன்தம்பி கைம்பெண் நாச்சியாகண்டுவின் ஆதனம். வடக்கு—கையொழுங்கை. மேற்கு—ஒழுங்கை. தெற்கு—செயினுப்பிள்ளை மரக்காயர் பெண் மொகமெட் கனியாவின் ஆதனம். இதடங்கலும்.

இ. கனகரத்தினம்
கொமிஷனரும், விலைமதிப்பாளரும்.
நம். 35, கொழும்புத்துறைறேட்,
சுண்டிக்குளி, யாழ்ப்பாணம்,

---

### நன்றியறிந்த ஸ்தோத்திரம்

சருவேசுரனின்இரக்கத்தாலும், பரி.சதா சகாயமாதாவின் விசேஷ உதவியாலும், அர்ச்சியசிஷ்டர்களான ஜூட்ஸ், திரேசம்மாள், நீற்றம்மாள், ஆரோக்கியநாதர், அந்தோனியார் இவர்களின் பன்றாட்டினாலும் எமது குடும்பத்தில் ஏற்பட்ட பயங்கர துன்பம் மாறியமைக்கும், பரீட்சையில் பிள்ளை சித்தியடைந்தமைக்கும் பணிவுடன் நன்றியைச் செலுத்துகிறோம். இன்னும், இவர்களின் உதவியை இரந்து கேட்டு, பிரசுரிக்கப் பிந்தியமைக்குத் தாழ்மையுடன் மன்னிப்புக்கோருகிறோம்.

— மாதாவின் அடியாள்.

### நன்றித் துதி

அர்ச். யூதாதேயுவே, அதிபரிசுத்த அப்போஸ்தலரே என்றும், யான் இரந்து கேட்பவைகளைத் தட்டாது அளிக்கும் உமக்கு எனது நன்றியைத் தெரிவித்துச் சகலரும் உம்மை அறிந்து, போற்ற இதைப் பிரசுரிக்கிறேன்.

ஆர். ரி.

**"ஒற்றுமையீனம் வலிமையை அழிக்கும்; தீயஒழுக்கம் உடம்பை அழிக்கும்."**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாலர் பக்கம்



அன்புத் தம்பி, தங்கையரே!

இப்போ சில நாட்களாக உங்களிடமிருந்து பாலர்பக்கத்துக்குக் கடிதங்கள், கட்டுரைகள், கதைகள் ஒன்றையும் காணவில்லை. காரணம் எதுவோ? உங்கள் பாடசாலைகளை அரசாங்கம் எடுத்துவிட்டது என்ற கவலையோ தெரியாது. பாலர்பக்கத்துக்கு நிறைய எழுதுங்கள். உங்கள் விருப்பங்களையும் எழுதுங்கள். இப்பொழுது இடம்பெறும் தொடர் கதையைப்பற்றிய உங்கள் அபிப்பிராயங்களை எழுதுங்கள். சிறந்த கதைகள், கட்டுரைகள், கவிதைகள் கட்டாயமாகப் பிரசுரிக்கப்படும்.

உங்கள் அன்புள்ள அண்ணு

## லூர்து அன்னை

உலகில் பாவம் மிகுந்தோங்கி
உருக்குலைந்து நிலை கலங்கி
அலகைக் கொடுங்கோல் ஆட்சியிலே
அல்லல் நிறைந்த காலமது

*

கவலை கொண்டாள் கன்னித்தாய்
கடலாம் துன்பச் சுமைநீக்கி
உலகோர் வாழ்வுக் குதவிடவே.
உள்ளங் கொண்டாள் உவந்
திட்டாள்

*

மாசித் திங்கள் பதினொன்றில்
மாண்பார் லூர்துக் கெபிதன்னில்
ஏழைச் சிறுமி ஒருத்திக்கு
இன்பக் காட்சி அளித்திட்டாள்

*

சோதி மயமாய்ச் சுடர்வீசத்
தூய வெண்பனி ஆடையுடன்
நீலக்கச்சு தனை அணிந்து
நிர்மல வடிவங் காட்டினளே

*

துயரம் தோய்ந்த வதனமலர்த்
தாயாள் கன்னிமரி தோன்றி
ஏழைச் சிறுமிதனைத் தேற்றி
"அமல உற்பவம் நாமெ"ன்ன்ருள்

*

பாவிகள் பரமன் அடிசேர
பத்தியுடன் திருச் செபமாலை
மேதினி எங்கும் ஓதிவரும்
மேனிலை அடையச் செய்என்ருள்

*

மண்ணைத் தோண்டு, வரும்ஊற்ருல்
மண்ணில் அற்புதம் பலநிகழும்
என்மகளே இது நிச்சயமே
என்றுரை பகர்ந்தாள்; மறைந்
திட்டாள்

— துறவி.

---


உங்களுக்குத் தெரியுமா? By Scio



17-ம், 18-ம் நூற்ருண்டுகளில் வசித்திருந்த ஐரோப்பியர்கள் புஷ்பங்களை அருந்தினுர்களென்று சரித்திரவரலாறு தெரியப்படுத்துகின்றது. சிவப்புருேசாக்கள் கொண்டு எவ்விதம் தித்திப்புப்பண்டம் ஆக்குவது, வயலெற் புஷ்பங்கள் கொண்டு எவ்விதம் சர்க்கரைப்பாகு செய்வது, மறிகோள்ட் என்ற மஞ்சட்புஷ்பங்கள்கொண்டு எவ்விதம் 'பை'என்ற மாதோய்த்த பணிகாரம் சுடுவது என்பவைகளை அக்காலத்து ஆங்கில வைத்தியமுறைநூல்கள் எடுத்துக் கூறுகின்றன.

---

உங்களுக்குத் தெரியுமா? By Scio



தென்னமெரிக்காவிலே சிலிநாட்டில்நிகழ்ந்த பயங்கரபூகம்பத்தாலே கஷ்டமடைந்தவர்களுக்கு உதவி செய்யுமாறு சுதந்திரஉலகைச் சேர்ந்த 22நாடுகள் ஒன்றுசேரலாயின. ஐக்கிய அமெரிக்கதேசம் இருமுழுப் பட்டாளஆஸ்பத்திரிகளையும், மற்றும் உதவியுடன்சேர்த்து 420டக்றர்மாரையும், நேர்ஸ்மாரையும், வைத்தியசேவையில் ஈடுபட்ட அதிகாரிகளையும் அனுப்பிவைத்தது.

---

## மூவுலகேத்தும் தாயேவாழி

(ஸ்ரீலங்கா ராணி அன்னையே—எ. மெ)

பல்லவி

ஸ்ரீலங்கா ராணி அன்னையே
சீர்செல்வ மேவுகன்னியே—அமல
லூர்து அன்னையே—அருள்
தந்தாளும் என்னையே

சரணம்

அமலஉற்பவி அரிய ரெட்சகி
விமலயேசுவின் விளங்கு தாய்மரி
அகலஓட்டுவாய் அலகை செய்பிணி
சகலலோக மும்புகழ் தயாநிதி

இனியபாடலாற் புகழும் பால
ரெங்கள்
இதயம்யாவையும் இதமாய்
ஏற்றருள்
கனியும்தாயேஎம் கவலைநீக்கி
என்றும்
புனிதராக வாழப் புரிகுவாயருள்

பஞ்சம்நோய்பிணி பாரில் மிஞ்சும்
வேளை
தஞ்சம் தந்தெமைத் தாபரித்திடாய்
செஞ்சரணம்நாம் சேர்ந்துனையே
போற்றி
அஞ்சலித்திட அருள்தயா நிதி

வாழிவான்றல ராஜ ஈஸ்வரியே
வாழிபூதல மீட்பின் பூவையே
வாழி மூவுலகேத்தும் தேவதாயே
வாழிஎன்றும் வாடாத லீலியே

W. J. L பெர்ணுண்டோ,
கடற்கரைத்தெரு,
நீர்கொழும்பு.

தேவத்தைத் திருப்பதியில் 12-2-61-ல் கொண்டாடப்படும் லூர்துமாதா திருநாளை முன்னிட்டு இப்பாடல் இயற்றப்பட்டது.

---

ருேசாப்பூவானது தனது நிறத்தையும், வாசனையையும் வேரிலிருந்து பெற்றுக்கொள்ளுகின்றது. மனிதனுே இளம் பருவத்திலிருந்தே தனது நற்குணங்களையும், புண்ணியங்களையும் பெற்றுக்கொள்ளுகிருன்.

---


## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டில்
இல. M. B. 2473

யாழ்ப்பாணம், நல்லூர்
1. விஜயரெட்டினம் கந்தையாவும்
2. பெண் நல்லம்மாவும்
— வழக்காளிகள்.

எதிராக
இணுவில்
1. செல்லர் மயில்வாகனமும்
2. பெண் ஈஸ்வரி அம்மாவும்.
1-ம் எதிரி காலம்செல்ல, 2-ம் எதிரி 1-ம் எதிரியின் இடத்திற்கு பதில் எதிரியாக நியமிக்கப்பட்டா.
— எதிராளிகள்.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M. B. 2473-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பின்னுல் விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணி 1961-ம்ஞூ பங்குனிமீ 25-ம்உ (25-3-61) சனிக்கழமை பிற்பகல் 4மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத் தொகை: முதல் வட்டி ரூபா 3200. இன்னும் ரூபா 2000-த்திற்கு 1-10-58 தொடக்கம், 4-12-58 வரையும் 100-க்குப் 10% வட்டியும், பின்பு கூட்டுத்தொகைக்கு இறுபடும்வரையும் 5% வட்டியும், கோட்டுச்செலவு ரூபா 275-சதம் 70.

### காணி விபரம்

வடமாகாணம், யாழ்ப்பாண டிஸ்திறிக் யாழ்ப்பாணப்பகுதி, நல்லூர்க் கோவிற்பற்று, கோண்டாவில் இறை அரசுநின்ற ஒல்லை. பர. நி. இ. 5, குளி 11-ம் தென்கிழக்கே உள்ள கிணற்றில் தண்ணீர்ப்பங்கும், துர்வையில் பங்கும் சொரியலாய் 3 குளி விஸ்தாரமுள்ள நிலத்தால் வழிவாய்க்காலும் கிணற்றிலிருந்து 3 முழஅகலப் பாதையும். எல்லை: கிழக்கு—வேலாயுதர் முத்துவின் ஆதனம். வடக்கு—ஒழுங்கை. மேற்கு—பத்தர் சுப்பையாவிற்கும், அம்பலவாணர் பெண் கண்மணிக்கும் உரிய ஆதனங்கள். தெற்கு — முத்து பெண் வள்ளியம்மையின் ஆதனம். இதடங்கலும்

தா. செல்லையா,
கொமிஷனரும், விலைமதிப்பாளரும்
நம். 37, கொழும்புத்துறைவீதி,
சுண்டிக்குளி, யாழ்ப்பாணம்.

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டில்
இல. M. B. 2585.

யாழ்ப்பாணம் வண்ணர்பண்ணை கிழக்கு
சிவப்பிரகாசம் ருேட்
வல்லிபுரம் இளையதம்பி
— வழக்காளி

எதிராக
சாவகச்சேரி
வேலாயுதர் இராமலிங்கம்
— எதிராளி.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் M. B. 2585ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி, பின்னுல் விபரிக்கப்படும் ஓர் துண்டுக் காணி 1961ஞூ பங்குனிமீ 9-ந் உ [illegible]வியாழக்கிழமை முற்பகல் 9-30 மணி [illegible]டக்கம் அந்தக்காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத் தொகை: முதல் வட்டி ரூபா 605-00ம் இன்னும் ரூபா 500-00க்கு 1-12-58 தொடக்கம் 4-6-59 வரையும் 100க்கு 12% வட்டியும் பின்பு [illegible] தொகைக்கு இறுபடும் வரையும் 100க்கு 5% [illegible] கோட்டுச் செலவும்.


## விவேகி ஆண்டுமலர் 1961

"வாய்மை எனப்படுவது
யாதெனில் யாதொன்றும்
தீமை இலாத சொலல்"

என்னும் தெய்வப்புலவரின் அமுத வாக்கைத் தனது விருது மொழியாய்க்கொண்டு திங்கள்தோறும் வாசகநேயர்களின் உள்ளக் கமலத்தை மலர்விக்கும் விவேகியின் ஓர் ஆண்டு நிறைவு விழாவின் ஞாபகார்த்தமாக வெளியாகியிருக்கும் இவ்வாண்டு மலர் கண்ணுக்கும், கருத்துக்கும் இனிய விருந்தாக அமைந்துள்ளது.

அரசியல் இலக்கியம், சிறுகதை, சங்கீதம், வைத்தியம், சமையற்கலை ஆதியாம் பல துறைகள் பற்றியும் அவ்வவற்றில் பாண்டித்தியம் வாய்ந்த ஆசிரியர்களின் பொருள் பொதிந்த பலகட்டுரைகள் இதன் கண் இடம்பெற்றுள்ளன. அவை படித்தின்புறத்தக்கவை. இலக்கியத் திறனுய்வுகளும், பாடல்களும் சுவைபயந்து நிற்கின்றன. வண்ண ஓவியமாகத் திகழும் அட்டைப்படம் பாடற் போட்டிக்கான குறிப்பைத் தாங்கிநிற்கின்றது. அத்தோடு வழமையாக வெளிவரும் தொடர்கதைகளும், குறுக்கெழுத்துப் போட்டியும் மலரைச் சிறப்பித்துள்ளன. எனவே, இம்மலர் கல்லூரிகளிற் கற்கும் சிறுவர்களுக்கும், பொதுமக்களுக்கும் இனிய விருந்தாகும் என்பதில் எட்டுணையும் ஐயமில்லை

தமிழை ஒழித்துக்கட்ட ஆட்சியாளர் கங்கணம் கட்டிநிற்கும் இத்தருணத்தே தமிழை எந்தச் சக்தியாலுமே அழிக்கமுடியாது எனச்சவால் விடுவதுபோலக்கலைச் செல்வங்களைத் தமிழ் மணத்தோடு விளக்கிநிற்கும் இவ்வாண்டுமலர் இலங்கை வாழ் தமிழ்ப்பேசும் மக்களுக்கெல்லாம் ஒரு வரப்பிரசாதமாகும். தமிழ் மொழியை வளம்படுத்துவதில் நாமும்பங்குகொள்ளவேண்டும். எங்கள் நாட்டுச்சிறுவர் சிறுமியரைச் சிறந்த சிந்தனையாளராகவும், எழுத்தாளராகவும் மலர்விக்கவேண்டும். இந்த அரிய தொண்டை வளப்படுத்துவதில் விவேகி முனைந்திருப்பது கண்டு அதனை வாயாரவாழ்த்துகின்ருேம். விவேகி தமிழ் மக்களிடையே புதிய மலர்ச்சியை உண்டாக்குவதாக!

எமக்கு அனுப்பிய பிரதிக்காக நன்றிகூறுகின்ருேம்.

---


### காணி விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாண டிஸ்திறிக் தென்மராட்சிப்பகுதி சாவகச்சேரிக் கோயிற்பற்று சாவகச்சேரி இறை கண்டுவில் வளவு ப. நி. இ. 16¾ வீடும் பயிர் வகைகளும் கிணறும். எல்லை: கிழக்கு மரியாம்பிள்ளை மகள் சின்னுச்சி. வடக்கு ஒழுங்கையும் சின்னத்தம்பி பெண் நாகியின் ஆதனமும். மேற்கு சூசைப்பிள்ளை செபமாலைக்கும் மனுவேருக்கு முரிய ஆதனம். தெற்கு சின்னத்தம்பி பெண் நாகியின் ஆதனம் இதடங்கலும்.

செ. இரத்தினசபாபதி,
கொமிஷனரும், விலைமதிப்பாளரும்.
45, 4-ம் குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம். 3-2-61.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இரண்டாம் எலிசபேத் மகாராணியாரினதும் எடின்பரோ கோமகனதும்

# இந்திய பாகிஸ்தான் விஜயம்

சென்ற ஜனவரிமாதம் 20-ம் திகதி பிரித்தானிய "பிரிட்டானிய" பி. ஓ. ஏ.ஸி விமானமார்க்கமாகப்புறப்பட்ட இரண்டாம் எலிசபெத் மகாராணியாரும், எடின்பரோகோமகனும் இந்தியாவின் தலைநகரமான டெல்கியை ஜனவரிமாதம் 21-ம் திகதி வந்தடைந்தனர். அன்று, காலை 11மணியளவில் இந்தியா வந்தடைந்த அரசதம்பதிகள் மகாத்மாகாந்தியின் சமாதிக்கு மலர்வளையம் சார்த்திவிட்டு ஒருசெடியையும் நாட்டினர். அன்று, இந்திய ஜனாதிபதி டாக்டர் இராஜேந்திரப்பிரசாத் அளித்த விருந்திலும் கலந்து கொண்டனர்.

### விஜய விருந்துகள்

இந்தியாவில் 21 நாட்கள் தங்கஇருக்கும் அரசதம்பதிகளின் ஓய்வுக்காக மூன்று நாட்கள் ஒதுக்கப்பட்டுள்ளன. இரண்டு நாட்களை ஜய்ப்பூருக்கு அருகிலும், மற்ற நாளை பங்களூருக்கு அருகிலும் இவர்கள் கழிப்பார்கள்.

இந்தியாவின் குடியரசுத் தினமான ஜனவரி 21-ல் அரசி அதற்கான விழாக்களில் பங்கு பற்றியபின் பாரதப் பிரதமர் திரு. நேரு ஒரு விருந்தளித்து உபசரித்தார். மகாராணி குடிசைக் கைத்தொழில்களையும், பிரிட்டிஷ் மேற்கு வங்காளத்தில் துர்காபூரில் கட்டப்படும் இந்தியாவின் மிகப்பெரிய கைத்தொழில் திட்டத்தையும் சென்று பார்த்தார்.

இந்தியாவில் 10 நாட்களைக் கழித்தபின் அரசியும், கோமகனும் கராச்சிக்கு விமானம் மூலம் பெப்ரவரி16-ம் திகதி சென்றடைவர். இவர்கள் ஜனாதிபதி அயூப்கானுடன் அரசபவனியில் செல்வர். அன்று மாலை அரசியார் குவாட்-இ-அஸாம், திரு. ஜின்னாவின் சமாதியில் மலர் வளையம் சூட்டுவார். அதே இரவு ஜனாதிபதி அரசிக்காக ஒரு விருந்தளிப்பார்.

—(:)—

# வானவெளிக்குப் பிரயாணம்

## சிம்பன்சி குரங்கு உயிருடன் மீண்டது

வானவெளிக்கு மனிதனை அனுப்பும் அமெரிக்க விஞ்ஞானிகளின் முயற்சிக்கு ஒத்திகையாக, இம்மாதம் முதலாம்திகதி 4 வயதான ஆண் சிம்பன்சி என்னும் மனிதக்குரங்கை வானவெளிக்கு அனுப்பினர். 47½ ரூ. நிறையுடைய குரங்குடன், சென்ற ரொக்கட், எதிர்பார்த்ததைவிட வேகமாகவும் அதிக உயரத்துக்கும் சென்றது. வானவெளியில் மிதக்கவிடப்பட்ட இந்த ரொக்கட்டைத் தேடிக் கொண்டிருந்த அமெரிக்க விமானங்கள் அதைக் கரீபியனுக்கு அணித்தாயுள்ள பிராந்தியத்தில் கிடக்கக்கண்டனர். "ஹாம்" என்னும் பெயருடைய இக்குரங்கு கண்ணாடி மெத்தையில் இருத்தப்பெற்று, 10 அடி உயரமான பேழையில் இருந்தது. இப்பேழை 115 மைல் உயரத்துக்கும், மணிக்கு 4,000 மைல் வேகத்திலும் பறக்கும் என்று எதிர்பார்க்கப்பட்டாலும், அதிலும் 40மைல் கூடிய உயரத்துக்கும், 1,000 மைல் அதிக வேகத்துடனும் பறந்தது. பேழை கண்டு பிடிக்கப்பட்டபொழுது குரங்கு உயிருடன் இருந்தது.

—(:)—

## 8,00,000 மக்களின்

# குதூகல வரவேற்பு

அகமதபாத்தின் வீதிகளில் சுமார் 12மைல் தூரத்துக்கு மக்கள் பெருந்திரளாகக் கூடி நின்று எலிசபேத் மகாராணிக்கு இந்தியாவில் வேறெங்கும் இதுவரை இல்லாத கோலாகலமான வரவேற்பளித்தனர். இந்தியாவின் பிரதான தொழில்நகரமான இந்த நகரத்துக்கு எலிசபேத் மகாராணியாரும் எடின்பரோ கோமகனும் முதன் முறையாக விஜயஞ் செய்தபோது 8,00,000க்கு அதிகமான மக்கள் அவர்கள் சென்ற பாதைகளின் இருமருங்கும் கும்பலாய்க் குவிந்து நின்று பிரயாண நெருக்கடியை ஏற்படுத்தினர் என்று பொலிசார் கூறினர். பலதடவைகளில் மக்கள் வீதியின் இருமருங்கும் அமுக்கிக் கொண்டு நின்றதனால் மகாராணியார் சென்ற திறந்த மோட்டார்ரதம் ஸ்தம்பித்து நிற்கவேண்டியிருந்தது. மேற்கிந்தியாவின் நெசவுத்தொழிற் பட்டினமாகிய இந்நகரின் ஓரந்த முதல் மற்றந்தம் ஈறாக அரச குடும்பத்தினருக்கு மலர்கள்தூவி வரவேற்பளிக்கப்பட்டது. இம்மாதிரியான, ஆரவாரமான வரவேற்பை அரச குடும்பத்தினர் தங்கள் இந்திய சுற்றுப்பிரயாணத்தின் பதினொரு நாட்களில் வேறு எங்கணும் கண்டிருக்கவில்லை.

இங்கு கூடியிருந்த சனத்தொகை டில்லிநகரில் மகாராணியாரைவரவேற்கக் கூடியிருந்த சனத்தொகையை ஒத்திருந்தது. மக்கள் தங்கள் உணர்ச்சியைக் காட்டுவதற்கும், ஆரவாரஞ் செய்வதற்கும், சத்தமிடுவதற்கும் மிக உற்சாகமுடையவர்களாகக் காணப்பட்டனர். ஆச்சரியமும், பிரமிப்பும் அவர்களிடம் காணப்பட்டது. இங்கு மக்கள் அளித்த வரவேற்பு டில்லிநகரைவிடப் பன்மடங்கென்றே கூறவேண்டும்.

---

# புதிய ஜனாதிபதி

பிரேசிலின் தலைநகரமாகிய பிரேசிலியாவில் புதிய ஜனாதிபதியாக ஜானியோ குவாட்ரோஸ் பதவி ஏற்றுச் சத்தியப்பிரமாணஞ் செய்த பொழுது 55 நாடுகளின் பிரதிநிதிகளும் 1,500 அழைப்புப்பெற்ற பிரதிநிதிகளும் பாராளுமன்றத்தில் கூடியிருந்து பலத்த ஆரவாரஞ் செய்தனர். ஜனாதிபதியவர்கள் சத்தியபிரமாணஞ்செய்தபோது குடியரசின் சட்டதி[illegible]டங்களையும், அரசியல் சட்டங்களையும் பாதுகாத்து அவற்றிற்குப் பணிந்து நடப்பதுடன், தேச உரிமைகளையும் பாதுகாப்பதாக உறுதியளித்தார்கள். அவரைத் [illegible]து உபஜனாதிபதியாகத் திரு. ஜாஓ கவுலா[illegible] சத்தியப்பிரமாணஞ் செய்து கொண்[illegible].

# இலங்கை கொம்யூனிஸ்த பாதை...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

தலையிட்டுச் சருவிச் சதிசெய்ய ஆரம்பித்துள்ளனர். சிவில்சேவிஸ் (C. C. S) எனப்படும் உயர் உத்தியோகஸ்தர்மீதும் சருவுதல் ஆரம்பமாகியுள்ளது. இதன் பிரதிபலிப்புத் தெளிவாகிவிட்டது.

**படி 8. பிரசித்த முன்னணி இயக்கம் ஒன்று ஆரம்பிக்கப்பெற்றுள்ளது.**

மார்க்சியவாத இயக்கம்ஒன்று, சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் பின் ஆசனத்தாராலும், சிறப்பாகக் கண்டனக் கட்சியாளராலும் நம்பிக்கையான முறையில் ஆக்கப்பட்டுள்ளது.

நாம் யாவரும் ஐக்கியமுற்று ஒன்றுகூடுவதற்குக் கிடைத்திருக்கும் இச்சுதந்திர சந்தர்ப்பத்தில், நமது செல்வநாட்டினை பொதுவுடமை ஆதிக்கத்திலிருந்து காப்பாற்றும்படியாக ஒன்று சேர்ந்து உழைப்போமாக.

---

# லூர்து சுனையால்...

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

அறியமாட்டேன். வீணான இம்முயற்சிகளில் பிரவேசிப்பதில்லை என்பது எனதுகொள்கை. ஆகவே சுற்றிப் பார்த்தேன்.

எனது இடது பக்கத்தில் ஜோர்ஜ் டெல்பிரானோ என்னும் பத்துவயதுச் சிறுவன் காணப்பட்டான். பிறப்பிலிருந்தே அஸ்த்மாவினால் பீடிக்கப்பட்டவன். மூச்சையிழுப்பதற்கு அவன் படும் வேதனைகண்டு வருந்தினேன். வலது பக்கத்தில் ஜோர்ஜ் ரோறெலி என்னும் அழகான பையன். பிறப்பிலிருந்தே பார்வையற்றவன். மூளையிலும் சில நோய்கள் உண்டு. துடிதுடிப்புடன் காணப்பட்டான். தேவஅன்னையிடம் தனக்குப் பார்வையளிக்குமாறு அடிக்கடி வேண்டிக்கொண்டான். கடந்த ஒன்பது வருடங்களாக அவனது அன்னை அப்பையனை அங்கு கொண்டுவருகிறாள். 'முட்டாள் சனங்கள்' என எனக்குள்ளேயே கூறிக் கொண்டேன்.

பூசையின் பின்னர் மீண்டும் ஏழு வியாகுலங்களின் மருத்துவ மனைக்கு எங்களைக்கொண்டு சென்றனர். அங்கு காலையுணவு அளிக்கப்பட்டது. சிறிது நேரங்கட்கு முன்னர் என்னுடன் தோழமைகொண்ட குருட்டுப் பையனின் பக்கலில் அமர்ந்து உணவருந்தினேன். பின்னர் ரோறெலியின் அன்னை அவனைக் கூட்டிச்சென்றாள். எனது துணைவராக நியமிக்கப்பட்டவர் மசபியேல் கெபிக்கு என்னையழைத்துச் சென்றார். கெபியின்கீழே முழந்தாளிட்டுச் செபித்தபின் தரையைக் குனிந்து முத்தமிட்டார் என் துணைவர். வேடிக்கைபார்த்துக்கொண்டிருந்த யானும் வேடிக்கையாக அவ்விதம் முத்தமிட்டேன். என் நண்பர் ஆறு மெழுகுவர்த்திகளைக் கொழுத்தினார். தேவஅன்னையில் நம்பிக்கைகொண்ட எனது அன்னைக்காகவும், குருட்டுப் பையனுக்காகவும் யானும் இரு வர்த்திகளைக் கொழுத்தினேன்.

அன்று மாலை நோயாளர்கள் அற்புத நீரூற்றில் தோய்வதற்காகக் கொண்டுசெல்லப்பட்டனர். யான் அங்ஙனம் செல்ல மறுத்துவிட்டேன். ஆகவே என்னை எவரும் நிர்ப்பந்திக்கவில்லை. அடுத்தநாள் மாலையும் என் துணைவருடன் கெபியின் முன்னிலையில் அமர்ந்திருந்தபோது லூர்து பதிக்கு வந்திருந்த நீஸ் நகரைச் சேர்ந்த எனக்கு மிகவும் அறிமுகமான தாதியொருத்தி என்னைக் கண்டாள். நோயாளர்கள் நீரூற்றில் தோய்ந்து கொண்டிருக்கிறார்கள். நீங்கள் இங்கு என்ன செய்கிறீர்கள்? என வினவினாள். யான் செல்ல மறுத்துவிட்டதாக என் துணைவர் கூறினார். அவர் அப்படித்தான் கூறுவார். நீங்களும் பார்த்துக்கொண்டிருங்கள் எனக் கூறிய செல்வி ஜனற்று, எழுந்து வாருங்கள் எனக் கடுமையாகக் கூறினாள். யான் மறுத்தேன். ஆயினும் பிடிவாதமாக என் துணைவரினுதவியுடன் அற்புதச்சுனைக்கு என்னை அழைத்துச் சென்றாள்.

சுனையின் அருகில் இரு தொண்டர்கள் என்னையழைத்தனர். எனது உடைகளைக் களைந்து துவாலையொன்றை உடுத்தினர். யான் எந்த மொழி பேசுபவன் என வினவினர். பிரான்சிய மொழி எனக் கூறினேன். ஒரு வேண்டுதலைப் பிரான்சிய மொழியில் கூறிக்கொண்டே சுனையினுள் என்னை அமுக்கினர். அவர்கள் கூறிய செபங்களை யானும் கூறிக்கொண்டேன். அத்தருணத்தில் பக்கத்தறையில் எனது புதிய நண்பன் ரோறெலி உரத்தசப்தமாகச் செபிப்பது என் காதில் விழுந்தது. அப்பையனின் பரிதாப நிலையைச் சிந்தித்தேன். என்னையுமறியாமல் எனது உதடுகள் சப்தமிட்டன. தேவனே நீர் உண்மையாகவே இருப்பீராயின் இந்தப் பையனின் வேண்டுகோளை நிறைவேற்றும். அவன் என்னைப்பார்க்க அதிகமான உதவி தேவைப்படுகிறான் என உருக்கமாகப் பிரார்த்தித்தேன்.

தண்ணீரில் மூழ்கிய யான் திடீரென அதிர்ச்சியடைந்தேன். துணைவர்கள் எனக்குதவியாகக் கரங்களை நீட்டினர். ஆயின் அவர்களின் உதவியின்றியே யான் மூன்று படிகளையும் தாண்டி வெளியேறினேன். எனது கால்கள் மீண்டும் எனக்குச் சேவையாற்றத் தொடங்கிவிட்டன. எனது வலதுகரம் என்னையறியாமலே முகத்தையும் கண்களையும் தலையையும் தடவிக்கொண்டிருந்தது. புதுமை புதுமை என்று சப்தமிட்டான் சிறுவன் டெல்பிரானோ ஆம், யான் குணமடைந்தேன் என்பதை ஊகித்துக்கொண்டேன். தண்ணீரிலிருந்து வெளியேறினேனே தவிர ஈரம் துவட்டவும் எனக்குநேரம் கிடைக்கவில்லை. பக்தர் குழாம் என்னைச் சூழ்ந்துகொண்டது. அன்னையின் உதவிபெற்ற தாசனைச் சந்தித்து அவனுடன் உரையாட ஒவ்வொருவரும் விரும்பினர். ஆயின் சனக் கூட்டத்தின் நடுவே யான் சிக்கி அவதியுறுவண்ணம் தொண்டர்கள் எனக்குப் பாதுகாப்பளித்து மருத்துவ மனைக்கு இட்டுச்சென்றனர்.

வைத்திய நிபுணர்கள் என்னைப் பரிசோதித்துக் குணமுற்றேனென அத்தாட்சிப்பத்திரமளித்தனர். ஆலயத்துக்கு விரைந்து சென்றேன். நன்றி செலுத்த அல்ல. பல வருடகாலம் தீர்க்கப்படாத எனது பாவங்களைச் சங்கீர்த்தனம் செய்ய. அடுத்தநாள் நன்மையும் அருந்தினேன். அன்று எனது குருட்டு நண்பன் முதல் நன்மை பெற்று மகிழ்ந்தான். அவனுக்காக இறைவனை வேண்டிக்கொண்டேன். ஆடிமாதம் ஏழாம்நாள் மீண்டும் நீஸ் நகருக்குப் புறப்பட்டேன்.

இன்று யான் இறைவனில் அதிக நம்பிக்கை வைத்திருக்குமொருவன். அதனால் என் கம்மியூனிஸ்த தோழர்களின் அவநம்பிக்கைக்கு ஆளாகியவன். ஆயின் அது என் குற்றமல்ல.

---

Printed and Published for the Proprietor by NICHOLAS JAMES, residing at No. 20, [illegible] Cross Street, Jaffna, at St. Joseph's Catholic Press, Catholic Mission Premises, Main Street, Jaffna on Thursday February 9-1961

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org